Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

- 7 SEP 2004

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx. Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag phone shop
259,கே.கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com

பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 21 (07.09.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :340

# அடுத்த மூன்று மாதத்துக்குள் ஐ.தே.க. ஆட்சியை பிடிக்கும்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சூளுரை

(கொழும்பு)

**அடுத்த மூன்று மாதங்களுக்குள் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து – பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் என – எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ஐ.தே.கவின் 58 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

நாட்டின் பொருளாதாரத்தை இன்றைய அரசாங்கம் கேள்விக்குறியாக்கிவிட்டது.

சமாதான முயற்சிகளும் தெளிவற்ற போக்கில் சென்றுகொண்டிருக்கிறது. இப்படியான நிலையிலிருந்து நாட்டை மீட்கக்கூடிய வலிமை ஐ.தே.கவுக்கே உள்ளது.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக யோசனையை மையமாகக் கொண்டு - சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்காவிட்டால் நாடு பாரிய சிக்கலுக்கு முகங் கொடுக்க நேரிடும்.

இலங்கைக்கு அழிவை ஏற்படுத்தும் வகையில் மீணடும் ஒரு போர் வெடிப்பதை ஐக்கிய தேசியக் கட்சி அனுமதிக்காது.

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாது விட்டால், அதற்குப் பதிலாக நாட்டை யுத்தத்துக்கு இட்டுச் செல்லக்கூடாது. எதிர்க்கட்சி என்ற வகையில் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உண்டு.

அதேசமயம் மக்களுக்கு வழங்கிய ஆணைகளை நிறைவேற்றும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என்பதை ஞாபகப்படுத்தி வருகிறேன்.

மக்கள் இன்னும் (12ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படைக்கு நவீன ரக ஆயுதங்கள்!

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப் படைப்பிரிவை மறுசீரமைத்து - நவீன ஆயுதங்களுடன் வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

பொலிஸ் விசேட அதிரடிப்படைத் தலைமையகத்திற்கு நேற்று திடீர் விஜயத்தை மேற்கொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் விசேட அதிரடிப்படைக்குத் தேவையான நவீன ஆயுத உபகரணங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா இணங்கியுள்ளார்.

விசேட அதிரடிப்படைக்கு போதிய ஆயுதங்கள் வழங்கப்படவில்லை. குறைந்தளவிலான படையினரே பெரியளவிலான கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

விசேட அதிரடிப்படையை இரண்டு கட்டளைப் பீடங்களாக பிரித்து பிராந்திய பிரிவுகள் அம்பாறையிலும், நுவரெலியாவிலும் ஏற்படுத்தப்படவுள்ளன.

இதன்மூலம் நாடெங்கும் சீரானசேவையை வழங்கமுடியும். (12ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கும்!

(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகளை மீண்டும் அதிகரிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆராய்ந்துவருவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிபொருட்களின் விலை உலக சந்தையில் அதிகரிப்பதால், திறைசேரிக்கு வழங்க வேண்டிய 25 பில்லியன் ரூபாவை வழங்க முடியாமலிருக்கும்.

இதன்படி - ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 50 சதமும், ஒரு லீற்றர் டீசலுக்கு 10 ரூபாவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணைக்கு 2.50 சதத்தாலும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

அரசு இந்த நிதி நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்காகவே திறை சேரிக்கு வழங்க வேண்டிய 250 மில்லியன் ரூபாவைச் செலுத்துவதற்காக இந்த விலை அதிகரிப்புக் குறித்து ஆலோசிக்கப்பட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

**தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு; பெயர் விபரம் உள்ளே**

## இலங்கை வரவுள்ள இந்தியத் தளபதி திருகோணமலைக்கு முக்கிய விஜயம்!



(கொழும்பு)

அடுத்த வாரம் இலங்கை வரவுள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் திருகோணமலைக்கு விஜயம் செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வரவுள்ள இவர், திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு முக்கிய விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார்.

## மட்டக்களப்பில் இன்று நடைபெறவிருந்த படையினர் - புலிகள் சந்திப்பு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய மட்டக்களப்பில் இன்று நடைபெறவிருந்த விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான சந்திப்பு ஒத்தி

கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், இதைத் தடுத்துநிறுத்துவதற்காக இருதரப்பும் சந்தித்து பேசவேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வலியுறுத்தியிருந்தது



(கொழும்பு)

அடுத்த வாரம் இலங்கை வரவுள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் திருகோணமலைக்கு விஜயம் செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வரவுள்ள இவர், திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு முக்கிய விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார்.

1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் இந்தியப் படையினர் விலகிச்சென்ற பின்னர் திருகோணமலைக்கு விஜயம் செய்யவிருக்கும் சிரேஷ்ட இந்தியக் கடற்படை அதிகாரி அட்மிரல் அருண்பிரகாஷ் என்பது குறிப்பிடத்தக்கது.

அட்மிரல் அருண் பிரகாஷ், தனது இலங்கை விஜயத்தின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய மட்டக்களப்பில் இன்று நடைபெறவிருந்த விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று மாதங்களாக படைத் தரப்பு- புலிகள் சந்திப்பு இடம்பெறவில்லை. கிழக் கில் தமது போராளிகள் தொடர்ச்சியாகக் கொல்லப்படுவதைக் கண்டித்தே புலிகள் இந்தச் சந்திப்பிலிருந்து தற்காலிகமாக விலகியிருந்தனர்.

எனினும், கிழக்கில் தொடர்ச்சியாக கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், இதைத் தடுத்துநிறுத்துவதற்காக இருதரப்பும் சந்தித்து பேசவேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வலியுறுத்தியிருந்தது.

கடந்த வாரம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த கண்காணிப்புக்குழுத் தலைவர் இருதரப்பையும் சந்தித்துப் பேசுவதற்கான இணக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்.

இதனபடி கடந்த வெள்ளியன்று நடைபெற விருந்த இந்தச் சந்திப்பு, இராணுவத் தரப்பின் கோரிக்கைக்கு அமைய ஒத்திவைக்கப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

# விமான எதிர்ப்பு ஏவுகணைகளை புலிகள் தரையிறக்கியுள்ளனராம்!

## கொழும்பு ஆங்கில வார இதழ் கூறுகிறது

(கொழும்பு)

கடந்த மாதம் 16 ஆம் திகதி முல்லைத்தீவு - சாலைக் கடற்பரப்பில் வைத்து ட்ரோலர் ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகளால் இறக்கப்பட்ட ஆயுதங்களில் நவீனரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் இருந்ததாக கொழும்பு ஆங்கிலவாரப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது -

விடுதலைப் புலிகளால் கொண்டுவரப்பட்ட ட்ரோலர் மிகப் பெரியதல்ல. இந்த ட்ரோலரில் ஏவுகணைகள் மட்டுமா கொண்டுவரப்பட்டது அல்லது அதனுடன் இணைந்து ஆயுதங்களும் கொண்டுவரப்பட்டதா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

இது சிறிய ட்ரோலராக இருந்தாலும், நவீனரக ஆயுதங்களை சிறிய இடமொன்றில் வைத்தே பெருமளவில் கொண்டுவரலாம். தனியொரு மனிதனால், தோளில் வைத்து இயக்கப்படக்கூடிய ஏவுகணைகள் மிகப் பெரியவையல்ல இதை சிறிய இடத்தில் வைத்தே கொண்டுவரலாம்.

விடுதலைப் புலிகளிடம் தற்போது விமான எதிர்ப்பு பிரிவொன்று உள்ளது. இது சிறிய ஒரு பிரிவாக இருந்தாலும், உயர்திறன் மிக்கது. தமது நடவடிக்கையின்போது, விடுதலைப் புலிகள் நன்குபயிற்சிபெற்ற இந்தப் படைப்பிரிவை பயன்படுத்துகின்றார்கள்.

எனவே இந்தப் படைப் பிரிவை மேலும் வலுப்படுத்தவே விடுதலைப் புலிகள் இந்த ஏவுகணைகளை கொண்டுவந்துள்ளனர். ஆனாலும், (12ஆம் பக்கம் பார்க்க)

# போலி பணநோட்டுக்களுடன் மன்னாரில் மூவர் கைது!

(மன்னார்)

மன்னாரில் போலி பணநோட்டுக்களுடன் மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. முருங்கனில் இருந்து மன்னார் சென்றபோதே இந்த மூவரையும் பொலிஸார் கைது செய்தனர். இவர்களிடமிருந்து போலி 500 ரூபா நோட்டுக்கள் பதினெட்டையும், ஆயிரம் ரூபா நோட்டையும் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்த மூவரையும் மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்தபோது எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.




எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# வலயமட்ட ஆங்கில தின போட்டி முடிவுகள் விபரம்!

(யாழ்ப்பாணம்)

வலயமட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் அண்மையில் யாழ்.வலயக் கல்விப்பணிமனையால் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு :

### தரம் - 10

முதலாம் இடம் - ர.தர்ஷனா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் - சே.ஜனனி (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

### தரம் - 11

முதலாம் இடம் - ச.விதுஷன் (யாழ்.இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - பு.சாளினி (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - சி.ரம்யா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

### தரம் - 12

முதலாம் இடம் - ச.பிரியங்கரி (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் - கு.தர்ஷனா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - கு.அபிரா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

### தரம் - 13

முதலாம் இடம் - இ.வித்தியா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - பெ.நொய் லினா ஜீவிதா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - வி.அபர்ணா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

## எழுத்தாக்கம்

### தரம் - 06

முதலாம் இடம் - ஹ.சொலமன் ராஜராம் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - மி.மிதிரிகா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - வி.விதுசன் (யாழ்.இந்துக் கல்லூரி).

### தரம் - 07

முதலாம் இடம் - கு.தனுஷியா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

இரண்டாம் இடம் -ஆ.அர்ச்சனா (வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை).

மூன்றாம் இடம் - ந.சதீஷ்காந் (யாழ்.இந்துக் கல்லூரி).

(தொடரும்)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்

யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான

பிறீமா கிறீன் மா கேள்விகோரல் - மே, யூன் -2004

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக் தொன்பிறீமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவரிடமிருந்து கோரப்படுகின்றன

| 2004 மே | 2004 யூன் |
| --- | --- |
| 1500 MT | 1500 MT |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.09.07 ம் திகதி தொடக்கம் 2004.09.21 ம் திகதி வரையான காலப் பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.09.22 ம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

4. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிறீமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி"என எழுதப்பட வேண்டும்.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல் படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் மே மாதத்திற்கு 30 நாட்களுக்குள்ளும், யூன் மாதத்திற்கு 60 நாட்களுக்குள்ளும் வலுவுடையதாக இருக்கும்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்.
யாழ்ப்பாணம்.
06.09.2004 (சி-3050)


# தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அலுவலகம் நேற்று நல்லூரில் திறந்துவைக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் பணிமனை நேற்றுக் காலை 10.30 மணியளவில் கோவில் வீதி, நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு, தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் வி.குனேந்திரன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வில் - மங்கள விளக்கினை தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஆலோசகர் எஸ். வரதராஜன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் சி.நளனும், தமிழ் மாணவர் ஒன்றியக் கொடியினை முன்னாள் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ச.நிலக்ஷனும் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் தமிழ் மாணவர் ஒன்றியப் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண மனித உரிமைகள் அமைப்பின் செயலாளர் கருணாரட்ணம் அடிகளார் நாடாவை வெட்டிப் பணிமனையைத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் வி.குனேந்திரன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதில், தலைமை உரையினை தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவரும், ஆசியுரையினை நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமச்சாரிய சுவாமிகளும், கருணாரட்ணம் அடிகளாரும், சிறப்புரையினை துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ச.ஆர்வலன், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். விக்கினேஸ்வரன், ஆசிரியர் எஸ். வரதராஜன், தமிழர் ஆசிரிய சங்கத் தலைவர் த.பஞ்சலிங்கம் மற்றும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் ஆகியோர் உரையாற்றினர். இறுதி நிகழ்வாக, முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர் திலக்ஷன் நிறைவுரையாற்றினார்.

இந்தநிகழ்வில் - பெருமளவான பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் கலந்துகொண்டனர். நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் - மண்டபத்துக்கு வெளியே வீதியில் நின்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப்பிரதி நிதிகளும் நிகழ்வுகளை அவதானித்துக கொண்டிருந்தனர்.

## சீசன் வழங்கும் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட.பிராந்திய போக்குவரத்துச் சபையினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பருவகாலச் சீட்டு வழங்குவதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் 5 ஆம் திகதி வரை மட்டுமே பருவகாலச் சீட்டு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பாடசாலைகள் இந்த மாதம் முதலாம் திகதி ஆரம்பித்தமையால், பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச்சீட்டு இந்த மாதம் 10 ஆம் திகதிவரை வழங்கப்படும் என வட.பிராந்திய போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்ககாதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 18 ஆம் நாள் நிகழ்வுகள் நடை பெறும்.

இந்தநிகழ்வில் - எஸ்.சண்முகராகவன் - பாட்டு, எ.ஜெயராமன்- வயலின், கே.அனந்தகோவன் - மிருதங்கம், கே.நந்தகுமார் - கெஞ்சிரா ஆகியோருடன் பாட்டுக்கச்சேரி இடம் பெறும்.

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக அனைத் துப்பீட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதால், அனைத்துப்பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ..த) - 2004 ஆம் ஆண்டு பரீட்சை முடிவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையிலான மீளாய்வுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைததுவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், 1ஏபி, 1சி தர ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம்!

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவர், யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களத்தினரால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளார்.

மணற்தரை வீதி, கந்தர்மடம் பகுதியில் வசிக்கும் ஞானசேகரன் வாசுதேவன் என்பவர் 100 கிராம் கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த சமயமே மதுவரித் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டார்.

இவர் வைத்திருந்த கஞ்சா பறி முதல் செய்யப்பட்டுள்ளதுடன், நேற்றையதினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

கஞ்சா வைத்திருந்தவர் தனது குற்றத்தினை ஏற்றுக்கொண்டுள்ளதை அடுத்து, இவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், மூவாயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

சமூகச்சீரழிவை ஏற்படுத்தக்கூடிய கஞ்சா போன்ற போதைப் பொருட்களை சட்டவிரோதமாக வைத்திருப்போர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ்.மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகளில் பருத்தித்துறை நகரசபையினர் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.அருந்த்வராஜா தெரிவித்தார். (12)


## திரையரங்கில் இன்று

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த
மதுர



காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்
(சி-2725)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், மீனா, சுஹாசினி நடித்த
ஷாக்



வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே)
காட்சி நேரம்: 11.00.2.45.6.00 (பி.நே.)
Strike Force
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்



07.09.04 முதல்
சுள்ளான்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே)

## வீடு தேவை

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்துக்காக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன் சுற்றாடலில் ஓர் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைகு தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : இணைப்பாளர்,
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,
அறை எண் - 30,
யாழ். போதனா வைத்தியசாலை,
தொ.பே. இல : 2225657
(925)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கைதடி மேற்கைச் சேர்ந்த வேலு மோகனதாஸ் என்பவருடைய கைத் தொலைபேசி - கைதடிச் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில், கடந்த புதன்கிழமையன்று பயணத்தின் போது (இல: 0776192258- NOKIA) தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். மனிதாபிமானத்துக்கு சன்மானம் வழங்கப்படும். வேலு மோகனதாஸ், (உதயநகர்) கைதடி மேற்கு. T.P: 0777 6623741. (C/3048)

Sept 11 ஆம் திகதி

புதிய வகுப்பு ஆரம்பம்

அறிவிப்பாளர் பயிற்சி

M.M.I.C
இல. 15 சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். Call: 0777316258

தகைமை G.C.E (O/L) சித்தியுடன் தமிழ் பாடத்தில் சிறப்புச் சித்தி

இதுவரை பதிவு செய்யாதவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

(C-3051)

### தமிழ் இளைஞருக்கு விதிக்கப்பட்ட

# 30 வருடச் சிறைத் தண்டனையை ரத்துச் செய்ய அரசுக்கு அறிவிப்பு!

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

**இராணுவ முகாமைத் தாக்கி படையினருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி, உயர் நீதிமன்றத்தால் 30 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட இளைஞரை, உடனடியாக விடுதலை செய்யுமாறு ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு – அரசாங்கத்துக்கு உத்தரவிட்டிருக்கிறது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது –**

1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இராணுவ முகாம் ஒன்றைத்தாக்கிப் படையினருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியதாக - மட்டக்களப்பைச் சேர்ந்த நல்லரத்தினம் லிங்கராஜா என்ற இளைஞர் 1993 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராகக் குற்ற ஒப்புதல் வழக்குமூலத்தின் அடிப்படையில், உயர் நீதிமன்றத்தில் 1993 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த இளைஞர் சார்பில் சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி ஆஜராகி வாதிட்டிருந்தார். இந்த வழக்கில் குறித்த இளைஞருக்கு 50 வருட சிறைத்தண்டனை வழங்கி, 1994 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து சட்டத்தரணி ரஞ்சித் பெர்னாண்டோவுடன் இணைந்து அ.விநாயகமூர்த்தி மேன்முறையீடு செய்திருந்தார்.

இந்த விசாரணையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு இளைஞனுக்குப் விதிக்கப்பட்ட தண்டனை 30 வருடங்களாகக் குறைக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக சுப்ரீம் நீதிமன்றிலும் மேன்முறையீடு செய்யப்பட்டது. அது ஏற்கப்படவில்லை.

இதனையடுத்தே, இந்த வழக்குத் தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 2001 ஆம் ஆண்டு முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டை விசாரித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு - அது தொடர்பாக சம்பந்தப்பட்ட நபர் குறித்து இலங்கை அரசாங்கத்துக்குத் தமது தீர்ப்பை அறிவித்துள்ளது. இந்தத் தீர்ப்பின்படி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் விதிக்கப்பட்ட உத்தரவை ரத்துச்செய்து - உடனடியாக சம்பந்தப்பட்ட இளைஞனை விடுவிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த இளைஞனுக்கு அரசாங்கம் போதிய நட்டஈட்டை வழங்குமாறு பணிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்த இளைஞன் தொடர்பான வழக்குக் குறித்து, அடுத்த 90 நாட்களுக்குள் தமக்கு அறிவிக்கப்படவேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அரசிடம் கோரியுள்ளது.

### தேர்தலுக்கு அடையாளஅட்டை

## அரசு சட்டமூலம் சமர்ப்பிக்காதாம் தேர்தல் ஆணையாளர் அதிருப்தி

தேர்தல் வாக்களிப்பின் போது அடையாள அட்டைகளைப் பயன்படுத்துவது தொடர்பான சட்டமூலத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்பதில் தமக்கு இன்னமும் நம்பிக்கையில்லை என, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

ஏற்கனவே இவ்வாறான திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதும் இவை பின்னர் ரத்துச் செய்யப்பட்டதை நினைவூட்டிய அவர், 1959 ஆம் ஆண்டில் இவ்வாறான சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டதெனினும், பின்னர் அது 1981 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்தின் மூலம் ரத்துச் செய்யப்பட்டது.

எனவே, அந்த சட்டமூலம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் வரை அதில் தமக்கு நம்பிக்கையில்லையென தேர்தல் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி – பிரதமர் இடையே முறுகல் நிலை உருவாகிறதாம்!

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான முறுகல்நிலை வலுவடைந்து வருவதாகத் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியுடன் சுதந்திர கட்சி கூட்டணி அமைத்தமை தொடர்பில் அதிருப்தி கொண்டிருந்த பிரதமர், சுதந்திரக் கட்சியில் தனக்கு ஆதரவானவர்களின் அணியொன்றை ஏற்படுத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, ஜனாதிபதி தனக்கு நெருக்கமான அமைச்சர்களுடன் கூட்டணி அமைத்துள்ளதாகவும் இவர்களுக்கிடையிலான உட்பூசல்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் ஆளும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் இந்த மோதல் கட்சிக்குள் பாரிய பிளவுகளை தோற்றுவிக்கும் அளவிற்கு மோசமான நிலையினை உருவாக்கி விடலாமென சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## பேச்சுவார்த்தை மேசைக்கு அரசு உடன் திரும்பவேண்டும்

### ஐ.தே.க. கோரிக்கை

வடக்கு - கிழக்கில் இடைக்கால த[illegible]ாட்சி அதிகாரசபையை நிறுவ [illegible]ண்டுமென, விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த யோசனைகளின் அடிப்படையில் அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், சகல அரசியற் கட்சிகளுடனும் கலந்தாலோசிக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா எடுத்த தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்கிறது.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் சகல கட்சிகளும் புரிந்துணர்வுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

அரசாங்கம் உடனடியாக பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பொலிஸ் சார்ஜன்ட் அக்கரைப்பற்றில் கைது

மட்டக்களப்பு - அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் சார்ஜன்ட்டாக கடைமையாற்றும் பொலிஸார் ஒ[illegible]வரை - அரச சொத்துக்களை த[illegible]பட்ட ரீதியில் வைத்திருந்தாரென [illegible] பெண்ணொருவருடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டாரெனவும் தெரிவித்து, தமண பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர் அவிசாவளையைச் சேர்ந்த ரணதுங்க (வயது 55) என்ற சார்ஜன்ட்டாவார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை சுகவீனம் காரணமாக அக்கரைப்பற்றிலிருந்து அவிசாவளை செல்வதற்காக தனியார் பஸ் ஒன்றில் குறித்த சார்ஜன்ட் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இவர் தொடர்பாக தமண பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, தமண பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து இவர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டார்.

அவ்வேளை அவரிடமிருந்து வெற்று மகஸின் 3, ஊர்காவற்படையினர் பயன்படுத்தும் தொப்பிகள் 5 மற்றும் பொலிஸ் முறைப்பாடு பதியும் புதிய பதிவேடு ஒன்றினையும் பொலிஸார் மீட்டெடுத்தனர்.

கடமை இல்லாத நேரத்தில் இவற்றை அவர் வைத்திருந்தமை அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துவதற்கே என தமண பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவர் கடந்த 2 ஆம் திகதி அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பெண்ணொருவரை பாலியல் பலாத்காரம் புரிந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் சனியன்று திருமலைக்கு விஜயம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது இவர்கள் அனைவரும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து உரையாடவுள்ளனர்.

இந்த சந்திப்பு புரிந்துணர்வுடன் கூடிய சந்திப்பாக அமைவதுடன், மாவட்டத்தில் மீளக்குடியேறி வருவோர் மற்றும் ஏனையோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாகவும் இவர்கள் நேரில் சந்தித்தும், கேட்டறிந்தும், கண்டறிந்தும் இதற்கான தீர்வை மேற்கொள்ளும் சந்திப்பாகவும் அமைகிறது.

குறிப்பாக இந்தச் சந்திப்பின்போது இவர்கள் முஸ்லிம் பிரமுகர்கள் மற்றும் பொது மக்களுடனும் கூடிப் பேசவுள்ளனர். இது தொடர்பான சந்திப்பு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து அன்று மாலை சிவன் கோவிலடியில் பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெறும். தமிழ்த தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் - 12 ஆம் திகதி, புல்மோட்டை பகுதிக்குச் சென்று அங்குள்ள தமிழ், முஸ்லிம் பிரமுகர்களையும் பொதுமக்களையும் சந்தித்து உரையாடவுள்ளனர். மற்றும் ஒரு குழுவினர் திரியாய், குச்சவெளி, கும்புறுப்பிட்டி, நிலாவெளி கிராம மக்களைச் சந்தித்து பேசவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அன்று மாலை நிலாவெளியில் பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து இவர்கள் சாம்பல்தீவு, ஆறாம்கட்டை, ஆத்திமோட்டை, சல்லி கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து உரையாடவுள்ளனர்.

13ஆம் திகதி - இவர்களில் ஒரு பகுதியினர் கந்தளாய், தம்பலகாமம் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்துப் பேசும் அதே வேளை, ஏனையோர் மூதூருக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

மூதூர் பிரதேச முஸ்லிம் பெரியார்கள் மற்றும் பொது மக்களைச் சந்தித்துப் பேசுவதைத் தொடர்ந்து, இவர்கள் ஈச்சிலம்பற்றுக்கு செல்லவுள்ளனர். அங்கிருந்து கிளிவெட்டி, மல்லிகைத்தீவு கிராமங்களுக்கும் செல்லவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மூதூர் கிழக்கு பிரதேசத்திற்குச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் அந்தப்பிரதேச மக்களைச் சந்தித்து உரையாடுவதுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்- தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார். இதனைத் தொடர்ந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முதல் தடவையாக திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வாக்காளர் இடாப்புப் பதிவுக்கு

## தேசிய அடையாள அட்டையின் மூன்று புகைப்படப் பிரதிகள்!

(கொழும்பு)

அடுத்தமுறை வாக்காளர் இடாப்பு புதுப்பிக்கப்படும்போது, விண்ணப்பதாரி தேசிய அடையாள அட்டையின் 3 போட்டோ பிரதிகளையும் சமர்ப்பிக்கவேண்டும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

இந்த மூன்று போட்டோப் பிரதிகளில் ஒன்று தேர்தல் ஆணையாளருக்கும், இன்னொன்று மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கும், மூன்றாவது பிரதி வாக்களிப்பு நிலையத்துக்கும் அனுப்பிவைக்கப்படும்.

வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குவது குறித்த சட்டமூலம் தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்போது நாடுமுழுவதும் 25 வீதமானோருக்கு அடையாள அட்டைகள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. எனவே, வாக்காளர்கள் அனைவருக்கும் அடுத்த ஒரு வருடத்துக்குள் அடையாள அட்டை வழங்கப்படுவதென்றும் இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

## அரசுக்கு இ.தொ.கா ஆதரவளிப்பது மலையக மக்களுக்கு செய்த துரோகம்

### வன்னி எம்.பி சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

இந்திய எதிர்ப்பெனக் கூறி - ஒருகாலத்தில் மலையக மக்களை ஜே.வி.பி துன்புறுத்தியிருந்தது. ஆனால் தற்போது அந்தக் கட்சி இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிக்க முன்வந்தமையானது, இந்தக் கட்சி மலையகத் தமிழருக்குச் செய்த பெரும் துரோகமாகும்.

இவ்வாறு, வன்னிமாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற தமிழ் மொழித்தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

1989 ஆம் ஆண்டு இந்திய எதிர்ப்பு எனக்கூறி மலையகத்தில் இருந்த மக்களின் சொத்துக்களை அழித்த ஜே.வி.பி, 11 இந்திய தேயிலைக் கம்பனிகளையும் எரித்தழித்தது. அத்துடன் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வாங்காமல் பகிஷ்கரிக்குமாறும் தெரிவித்தது.

அவ்வாறு செய்த ஜே.வி.பியே இன்று அரசாங்கத்துடன் பிரதான பங்காளிக்கட்சியாக உள்ளது. இவ்வாறு உள்ள ஜே.வி.பி. கட்சி இணைந்த அரசாங்கத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வந்துள்ளமையானது, அந்தக் கட்சியை நம்பி வாக்களித்த மக்களுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகச் செயல் என அவர் மேலும் தெரிவித்தார். (03)



பாதுகாப்பு அதிகரிக்கப்பட்ட கொழும்புத் துறைமுகத்தில், கடற்படை ரோந்துப் படகு ஒன்று கண்காணிப்பில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

# கடைசி ஒருநாள் போட்டியில் இந்தியாவுக்கு ஆறுதல் வெற்றி



இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்திய - இங்கிலாந்து அணிகள் இடையே 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட நட்வெஸ்ட் சலஞ்ச் கிரிக்கெட் தொடரில் முதல் இரு ஆட்டங்களில் இந்திய அணி 0-2 என்ற கணக்கில் இங்கிலாந்திடம் தொடரை இழந்தது.

இந்திய - இங்கிலாந்து அணிகள் இடையேயான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி லோர்ட்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்திய அணியில கடந்த போட்டியில் ஆடிய அகர்கர், பாலாஜி, ரோகன் கவாஸ்கர் ஆகியோர் நீக்கப்பட்டு நெஹ்ரா, கும்ப்ளே, தினேஷ் கார்த்திக் ஆகியோர் சேர்க்கப்பட்டனர். ஷேவாக் தொடக்க வரிசையிலிருந்து மாற்றப்பட்டு 4 ஆவது வீரராகக் களமிறக்கப்பட்டார்.

இங்கிலாந்து அணியில் சிறப்பாக ஆடிவந்த பிளின்ரொப்புக்கு பதிலாக மெக்ராத் சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக கப்டன் கங்கூலி, வி.வி.எஸ். லக்ஷ்மன் ஆகியோர் களமிறங்கினார்கள். கங்கூலி பொறுப்பை உணர்ந்து நிதானமாகவும், அடித்தும் ஆடினார்.

மறுமுனையில் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிந்தன. லக்ஷ்மன் 9, கை.்.ப் 2, ஷேவாக் ஒரு ஓட்டத்துடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 14 ஓவர்களில் இந்தியா 3 விக்கெட் இழப்புக்கு 48 ஓட்டங்களை எடுத்து தடுமாறியது.

4 ஆவது விக்கெட்டுக்காக ராவிட், கங்கூலியுடன் ஜோடி சேர்ந்தார். இந்த இணை அணியை சரிவிலிருந்து ஓரளவு மீட்டது.

36.2 ஓவர்களில் ஸ்கோர் 141 ஓட்டங்களாக உயர்ந்தபோது சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த கங்கூலி 90 ஓட்டங்களை எடுத்தநிலையில் ஹர்மிசன் பந்தில் வோகனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவர் 119 பந்துகளில் 5 பவுண்டரி, 3 சிக்ஸருடன் 90 ஓட்டங்களைச் சேர்த்தார்.



அடுத்து களமிறங்கிய யுவராஜ் சிங் 9, தினேஷ் கார்த்திக் 1, ஹர்பஜன்சிங் 0 ஓட்டங்களுடன் மளமளவென்று ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில் நின்ற ராவிட் 84 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் அரைச்சதத்தைக் கடந்தார். நன்றாக ஆடிவந்த ராவிட் 52 ஓட்டங்களுடன் ஹர்மிசனின் பந்தில் கொலிங்வூட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கியவர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

49.3 ஓவர்களில் இந்திய அணி 204 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நெஹ்ரா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இங்கிலாந்து அணி சார்பில் ஹர்மிசன் 4, ஹோவ, வோப் ஆகியோர் தலா 2, ஜைல்ஸ் ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

205 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியாக இருந்தது. தொடக்க வீரர்கள் டிரெஸ் கோதிக் ஒரு ஓட்டத்துடனும், சோலங்கி 9 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

2 ஆவது விக்கெட்டுக்கு கப்டன் வோகன் களமிறங்கினார். அவர் நிதானமாக நிலைத்து நின்று ஆடினார். ஆனால் மறுமுனையில் விக்கெட்டுக்கள் வீழ்ந்த வண்ணம் இருந்தன. ஸ்ரஸ் 2, மெக்ராத் 2, கொலிங்வூட் 4, ஜோன்ஸ் 11 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் அந்த அணி 19.1 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 62 ஓட்டங்கள் என்ற பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டது.

7 ஆவது விக்கெட்டுக்காக ஜைல்ஸ் - வோகனுடன் இணைந்தார். இந்த ஜோடி நிதானமாக நின்று ஆடி அணியை சரிவிலிருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டது.

இதனால் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. 43.1 ஓவர்களில் ஸ்கோர் 154 ஓட்டங்களாக உயர்ந்தபோது, ஜைல்ஸ் 39 ஓட்டங்களுடன் ஹர்பஜன்சிங் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதே



ஓவரின் கடைசிப் பந்தில் சிறப்பாக ஆடிவந்த வோகனும் ஆட்டமிழந்தார். வோகன் 141 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 74 ஓட்டங்களை எடுத்தார்.

வோகன் ஆட்டமிழந்ததும் இங்கிலாந்து மீண்டும் சரிவைச் சந்தித்தது. அதன் பின்னர் வந்த வீரர்கள்



நிலைத்து நிற்க முடியாமல் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர்.

48.2 ஓவர்களில் இங்கிலாந்து 181 ஓட்டங்களுடன் சுருண்டது. இந்திய அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. கங்கூலிக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.

இந்திய அணி சார்பில் நெஹ்ரா, ஹர்பஜன்சிங் தலா 3, பதான் 2, யுவராஜ்சிங் 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

முதல் 2 ஆட்டங்களில் தோற்ற இந்திய அணி கடைசி ஆட்டத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

## ஐ.சி.சி சிறந்த வீரர் விருதுக்கு சோபர்ஸ் பெயர்





(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் மிகவும் கௌரவம்மிக்க ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருதுக்கு மேற்கிந்தியத்தீவுகளின் கார்.்.பீல்ட் சோபர்ஸ் பெயர் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இடம்பெற்றிருந்த ரிச்சி பேனாட், சுனில் கவாஸ்கர், மைக்கல் ஹோல்டிங் ஆகியோர் சோபர்சின் பெயரைப் பரிந்துரைத்துள்ளதாக கவுன்சில் தெரிவித்தது.

ஐ.சி.சி விருது வழங்கும் நிகழ்வு இன்று மாலை லண்டன் அலெக்சான்ரா பிளேசில் நடைபெறவுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளின் சகலதுறை ஆட்டக்காரரான இவர் 93 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 8032 ஓட்டங்களைக் குவித்திருப்பதுடன், 235 விக்கெட்டுக்களையும் சாய்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த விஸ்டன் வீரர்களில் சோபர்ஸ"ம் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(சுதுமலை)

கட்டுடை விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திச்சங்க தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (91)

# நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சங்ஸ்தா கிண்ணத்தை கைப்பற்றியது

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான சங்ஸ்தா கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் வடமராட்சி பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்க இணைப்பாளரும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபருமாகிய செ.சேதுராஜா தலைமையில் இடம்பெற்றது. இதற்கு பிரதம விருந்தினராக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய முன்னாள் அதிபர் சி.சிற்றம்பலம் கலந்துகொண்டார்.

முதலில் 3 ஆம் இடத்துக்கான போட்டியில் விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மோதியது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - விக்னேஸ்வராக் கல்லூரியை 7:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் அணித்தலைவர் மா.மணிவண்ணனால் 6 கோல்களும், செ.ஞானேந்திராவினால் ஒரு கோலும் அடித்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 3 ஆம் இடத்தைப் பெற்றது.

இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி மோதியது. இதில் இடைவேளைக்கு முன்னதாக நெல்லியடி மகா வித்தியாலயத்திற்கு கோல் அடிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தும், அதை நழுவவிட்டனர்.

இருந்தபோதும் இடைவேளையின் பின்னர் முதல் 8 ஆவது நிமிடத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியின் வீரர் த.ஜீவிகனனினாலும், ஆட்டம் முடிவடைவதற்கு 30 செக்கன்கள் இருக்கும்போது - பானுராஜினாலும் ஒவ்வொரு கோல்கள் போடப்பட்டு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி தேவரையாளி இந்துக் கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சங்ஸ்தா கிண்ணத்தை சுவீகரித்தது.

இதில் சிறந்த ஆட்டநாயகனாக நெல்லியடி மகா வித்தியாலய அணி வீரர் த.ஜீவிகன் தெரிவுசெய்யப்பட்டார். (12)

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்

# செரீனா - கெப்ரியாட்டி காலிறுதியில் மோதுவர்!

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் மற்றும் ஜெனிபர் கெப்ரியாட்டி ஆகியோர் காலிறுதிப் போட்டியில் மோதவுள்ளனர்.

உலகின் 3 ஆம் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4 ஆவது சுற்றில் 15 ஆம் நிலை வீராங்கனையான ஷைண்டரை (சுவிற்சர்லாந்து) எதிர்கொண்டார்.

இதில் செரீனா வில்லியம்ஸ் 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். காலிறுதியில் அவர் 8 ஆம் நிலை வீராங்கனையான ஜெனிபர் கெப்ரியாட்டியை (அமெரிக்கா) எதிர்கொள்கிறார்.

கெப்ரியாட்டி 4 ஆவது சுற்றில் 7-5, 6-2 என்ற செட் கணக்கில் சுகியாமாவை (ஜப்பான்) தோற்கடித்தார்.

2 ஆம் நிலை வீராங்கனையான மவ்ரஸ்மோ (பிரான்ஸ்) 4 ஆவது சுற்றில் இத்தாலியைச் சேர்ந்த பிரான்செஸ்காவை எதிர்கொண்டார். இதில் மவ்ரஸ்மோ 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வென்றார்.

அவர் காலிறுதியில் ரஷ்யாவைச் சேர்ந்த எலீனா டெமண்டிவாவை எதிர்கொள்கிறார். 6 ஆம் நிலை



வீராங்கனையான எலீனா 4 ஆவது சுற்றில் சக நாட்டைச் சேர்ந்த ஜுவோரவாவை 1-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் இரண்டாம் நிலை வீரரான ரோட்டிக் (அமெரிக்கா), ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த குயில்லர்மோ கனாசை எதிர்கொண்டார்.

இதில் ரோட்டிக் 6-1, 6-3, 6-3 என்ற செட் கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றார். 4 ஆவது சுற்றில் அவர் டோமி ரொபர்ட்டோவை (ஸ்பெயின்) எதிர்கொள்கிறார்.

4 ஆம் நிலை வீரரான லைடன் ஹெவிட் (அவுஸ்ரேலியா) 6-1, 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் லோபசை தோற்கடித்தார்.

மற்ற ஆட்டங்களில் டோமி ஹாஸ் (ஜெர்மனி), ஜோகன்சன் (சுவீடன்), டோமி ரொபர்ட்டோ (ஸ்பெயின்), தோமஸ் பெட்ரிச் (செக் குடியரசு) ஆகியோர் வென்று 4 ஆவது சுற்றில் நுழைந்தனர்.

இரட்டையர் ஆட்டம் ஒன்றின் 3 ஆவது சுற்றில் லியாண்டர் பெயஸ் (இந்தியா), டேவிட் ரிகில் (செக் குடியரசு) ஜோடி பிஜோர்மேன் (சுவீடன்) - டொட் வூட்பிரிட்ஜ (அவுஸ்ரேலியா) ஜோடியை எதிர்கொண்டது.

இதில் பெயஸ் - ரிகில் ஜோடி 2-6, 7-5, 6-4 என்ற செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இதேபோல கலப்பு இரட்டையர் ஆட்டத்தின் 2 ஆவது சுற்றில் - பெயஸ், மார்ட்டினா நவரத்திலோவா (அமெரிக்கா) ஜோடி வெற்றிபெற்றது.

இந்த ஜோடி 6-3, 6-4 என்ற நேர் செட் கணக்கில் மார்ட்டின் (செக் குடியரசு), லெஸ் (பெல்ஜியம்) ஜோடியைத் தோற்கடித்தது.






ஐ.சி.சி போட்டியில் பங்குபற்ற இங்கிலாந்து செல்லும் இலங்கை அணி வீரர்கள்.

# அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் கல்வியில் முன்னேற்றத்தைக் காணமுடியும்

## வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர்

இன்றைய போரற்ற சூழ்நிலையில், வடக்கு - கிழக்குப் பிரதேச மாணவர்களது கல்வியைக் கட்டி வளர்க்க வேண்டிய ஒரு பெரும் பணி - இந்தப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றின் மீது கூட்டாகச் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து செயற்படும்போதுதான், எமது பகுதி - கல்வியில் சிறப்பான முன்னேற்றத்தைக் காணமுடியும் என, வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் நுண்கலை மன்றம் நடாத்திய அழகெழல் போட்டி - 2004 பரிசளிப்பு விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, சிறப்பித்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

கல்விக்கல்லூரிகளில் பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரிய மாணவர்கள் அனைவரும் - பாடசாலைகளுக்கே வரவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

கல்விக்கல்லூரிகளில் இருந்து வந்து, கல்விப் பணியில் இணைந்துகொள்ளும் ஆசிரியர்களைப் பற்றி கல்விப் புலத்தில் சிறப்பான அபிப்பிராயம் உண்டு.

எமது பிரதேச கல்வி அபிவிருத்தியை, சமூகத்தின் முழுத்தரப்பினரும் கூட்டு முயற்சி உணர்வுடன் இணைந்து, சிறப்பாகக் கட்டியெழுப்ப வேண்டிய பெரும் பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டுள்ளது.

மனிதன் தனது உணர்வுகளைக் கலைக்கூடாக வெளிப்படுத்துவதில் சிறப்புடையவனாக இருக்கின்றான். குகையில் வாழ்ந்த காலத்தில்கூட, அவன் தனது உணர்வுகளை சித்திரம், நடனத்துக் கூடாகவே வெளிப்படுத்தி வந்துள்ளான்.

இன்று கல்வியைக்கூட இயல்பான முறையிலேயே கற்பிக்கப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது. சோதனை முறையிலுள்ள தவறுகளைத் திருத்த, மகிழ்ச்சிகரமான கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகள் உதவுகின்றன.

தேடல், கூட்டு முயற்சி, கண்டுபிடித்தல் இதுவே இன்றைய புதிய கல்விச் சிந்தனையாக உள்ளது.

இதில் முழுமையான வெற்றியை நாம் இன்னும் காணவில்லை. எனினும், அதனையே அடியொற்றிவந்து கொண்டிருக்கின்றோம்.

ஆளுமை என்பதை அழகெழல் செயற்பாடுகளுக்கூடாகவும் வெளிப்படுத்த முடியும்.

எமது கல்வி முறையில் உள்ள பெரும் குறைபாடு யாதெனில், ஒரு பிள்ளை மூன்று மணித்தியாலத்துள் வெளிப்படுத்தும் ஆற்றல்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்கள் எடுக்க முற்படுவதே யாகும்.

உயர்தர மாணவர்களுள் மூன்று வீதமானோர் மட்டுமே இவ்வாறான தெரிவுக்குள் உட்பட்டு, பல்கலைக்கழகம் செல்கின்றனர்.

இங்கே அடிப்படையிலேயே குறைபாடு உண்டு. பல்வேறு துறைகளிலும் ஆற்றல் உள்ளவர்களை அடையாளம் காணத் தவறியுள்ளது.

எனினும், இன்றைய புதிய கல்விச் சிந்தனைகள் பல்வேறு தரத்தினரையும் அடையாளம் கண்டு, திறமையானவர்களை முன்னிலைப்படுத்தும் தன்மையுடையதாயுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (31)




மந்திகை ஆதார வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி ந.கதிரவேற்பிள்ளை டெங்கு ஒழிப்புப்பற்றி கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம். (12)

# பாடசாலை மைதானத்தை பயன்படுத்தும் இராணுவம்

(மானிப்பாய்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை, இராணுவத்தினர் பயன்படுத்தி வருவதால் - மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது -

மானிப்பாய் சந்தி இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினர் - கடந்த சில வருடங்களாக இந்த மைதானத்தில் தினமும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை கிரிக்கெட், றக்பி, உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை விளையாடி வருகின்றனர்.

இதனால் பயிற்சிகளில் ஈடுபடும் மாணவ, மாணவிகள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

பாடசாலைக் கதவு பூட்டியிருக்கும் சந்தர்ப்பங்களில்கூட, மதிலால் பாய்ந்து வந்து இராணுவத்தினர் விளையாடுவதையும் அவதானிக்க முடிகிறது.

இந்தப் பாடசாலை உயர்தர வகுப்புக்களைக்கொண்ட ஓர் கலவன் பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கது. (91)

## திருநாள் திருப்பலி

ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நாளை நடைபெறவுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த நவநாள்- தொடர்ந்து 9 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இன்று 6.30 மாலை திருப்பலியும், அதனைத் தொடர்ந்து நற்கருணை எழுந்தேற்றமும், ஆசீர்வாதமும் நடைபெறவுள்ளது.

நாளை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

# நந்தாவில் குளம் புனரமைப்பு தாமதம்

நந்தாவில் குளம் புனரமைப்புப் பணிகளுக்கு அயலவர்கள் ஒத்துழைப்பின்மையால் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வோர் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குளத்தைப் புனரமைப்பதற்காக நியாப் நிறுவனம் முன்வந்து அதற்கான நிதியையும் கடந்த ஆண்டு ஒதுக்கியது.

வேலைத் திட்டங்கள் ஆண்டின் முற்பகுதி முதல் நடைபெறுகின்ற போதிலும், பொதுமக்கள் இந்த வேலைகளைச் சரிவர முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனக் கூறப்படுகிறது.

குளத்தின் கால்வாய்ப் பகுதிகளில் குப்பைகளைக் கொட்டியும், கால்வாய்களை வெட்டியும் சேதப்படுத்துகின்றனர். பொது மக்களின் இந்தப் பொறுப்பற்ற செயலைக் கட்டுப்படுத்த, அண்மையில் அங்கு ஓர் பொதுக்குழுவும் அமைக்கப்பட்டிருந்தது.

எனினும், அந்தக் குழுவுக்குத் தெரியாமல் இரவுநேரங்களில் அங்கு குப்பைகளைக் கொட்டி வருகின்றனர்.

இதனால், நீர்தேங்கி நிற்கும் நிலை தோன்றியுள்ளது. இந்த விடயத்தில் பிரதேச சபை அதிகாரிகள் அக்கறையுடன் செயற்படல் வேண்டும் என யாழ் செயலகத்திலுள்ள வடக்கிழக்கு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்ட நியாப் அதிகாரிகள் தெரிவித்தனர். (ப)

# தியாகி திலீபன் நினைவாக போட்டிகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்பாட்டில் தியாகதீபம் லெப்டினன்ட் கேணல் திலீபன் நினைவாக - போட்டிகளை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களுக்கிடையில் நடத்தப்படவுள்ள இந்தப் போட்டியில் - நாடகப்போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடிவினாப் போட்டி என்பனவற்றை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21)

# நிவாரணப் பொருட்கள் சிரமமின்றிப்பெற கரவெட்டிப் பிரதேச செயலகம் ஏற்பாடு

(கரவெட்டி)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கடைகளுக்கூடாக இடம் பெயர்ந்தோர் மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறும் மக்கள், நிவாரணப் பொருட்களைச் சிரமமின்றிப் பெற, புதிய நடைமுறைகளை - கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் நடைமுறைப்படுத்தினார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகத்துக்கான நிவாரணப் பொருட்களைக் கொள்வனவு செய்து, அவை தரமானவை என்பதை உறுதிப்படுத்தி, அந்தப் பொருட்கள் விநியோகிப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னரே, நிவாரண அனுமதிக் கடிதங்களை கிராமசேவை உத்தியோகத்தர்கள் வழங்குவார்கள்.

இந்தப் புதிய நடைமுறைகளின் மூலம், பொதுமக்கள் நிவாரணத்தைப் பெறுவதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலைய வேண்டிய நிலை ஏற்படாது.

இந்த நடைமுறைகள் குறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. (13)

# தெய்வீக இசையரங்கு

(மானிப்பாய்)

நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவ காலத்தை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் - நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 18 ஆம் நாள் நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - வாஸஸ்பதி ரவீந்திரனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் - வயலின் பாக்கியலட்சுமி நடராசா, மிருதங்கம் - ரி.வரோதயன், கடம் - எம்.லோகேந்திரன் ஆகியோர் பங்கேற்பர். (100)

# நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கைநெறி யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகியது

இலங்கை நுலகர் சங்கத்தினால் நடத்தப்படும் "நூலகமும் தகவல் விஞ்ஞானமும் தரம் - I' டிப்ளோமா கற்கைநெறியின் ஆரம்ப வகுப்புக்கள் - நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியது.

கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் நூற்றுக்கும் அதிகமானோர் தோற்றியிருந்தும், அவர்களில் - தகுதியடிப்படையில் 58 பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் 38 பேரே முதல்நாள் ஆரம்ப வகுப்புக்குச் சமூகமளித்திருந்தனர் என, இலங்கை நூலகர் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் திருமதி.த.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்-

கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களில் 9 பேர் - இதுவரையில் தமது பதிவுகளை மேற்கொள்ளாதவர்களின் இடத்துக்கு, மேலும் 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு -

கே.வாணிமுகுந்தன் (பருத்தித்துறை), கே.சஞ்சீவனி (தாவடி), எஸ்.கிருஷ்ணவதனி (திருநெல்வேலி), கே.சுகிர்தா (உரும்பிராய்), எஸ்.சாம்னி (நல்லூர்).

ஏ.தர்ஷினி (பருத்தித்துறை), பி.தவகிருபா (கொக்குவில்), வீ.நிரஞ்சன் (கோப்பாய்), ஜே.பவித்திரா (யாழ்ப்பாணம்) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு வருடத்தைக் கொண்ட இந்தக் கற்கைநெறி - சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாத்திரம் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 12 மணிவரை இலங்கை நூலகர் சங்கத்தினால் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (100)

# நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனைக்கு புதிய உதவிப் பிரதேச செயலர் நியமனம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு, இந்த மாதம் முதல் புதிய உதவிப் பிரதேச செயலாளராக எம்.பற்றிக் நிரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க நிர்வாகசேவைப் பரீட்சையில் சித்தியடைந்து, பயிற்சி நெறிகளின் பின்னர் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கென நிரந்தரமாக ஒரு உதவி அரசாங்க அதிபர் நியமிக்கப்படாமல் தற்காலிகமாகவும், பதில்கடமை நிமித்தமாகவும் இதுவரைக்கும் நான்குபேர் நியமிக்கப்பட்டுக் கடமையை மேற்கொண்டு வந்தனர்.

தற்போது புதிதாகவும், நிரந்தரமாகவும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமையால், நெடுந்தீவின் அபிவிருத்தி மற்றும் சேவைகள் நன்கு முன்னேற்றமடைய வாய்ப்புக்கள் உள்ளதெனப் பொதுமக்கள் தரப்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# மந்துவில் கிழக்கு பாடசாலையில் வைத்தியசாலை நிறுவ கோரிக்கை

(நெல்லியடி)

மந்துவில் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கட்டடத் தொகுதியில், வைத்தியசாலை ஒன்றை நிறுவித் தருமாறு அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலை - கடந்த 5 வருடங்களாக மூடப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைக் கட்டடத் தொகுதியில் வைத்தியசாலை ஒன்றை நிறுவித் தருமாறு அந்தப் பகுதி மக்கள் சார்பாக மந்துவில் கிழக்கு அபிவிருத்தி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பாடசாலைக் கட்டடத்தைக் கல்வி வலயத்தினால், கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் மருத்துவமனை இன்மையால் - மந்துவில் கிழக்கு, மேற்கு, வடக்கு, இயற்றாலை, சரசாலையைச் சேர்ந்த மக்கள் - தமது நோய்களுக்குச் சிகிச்சை பெறுவதற்காக நீண்டதூரம் செல்ல வேண்டியுள்ளது.

இதனால், இந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, குறித்த பாடசாலைக் கட்டடத்தொகுதியில், வைத்தியசாலை ஒன்றை நிறுவித் தருமாறு, மந்துவில் கிழக்கு அபிவிருத்திச் சங்கம் - நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஊடாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. (13)

# நீண்டகாலமாக புனரமைக்கப்படாத கோண்டாவில் மகாவித்தியாலய வீதி

காங்கேசன்துறை வீதி உப்புமடச் சந்தியில் ஆரம்பித்து, கோண்டாவில் மகாவித்தியாலயத்துக்குச் செல்லும் வீதி - 15 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படவில்லை. இதனால், அந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வோர் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பலாலி வீதியையும், காங்கேசன்துறை வீதியையும் இணைக்கும் பிரதான வீதியாக இந்த வீதி உள்ளதால், பெருமளவான மக்களும், வாகனங்களும், கோண்டாவில் மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இந்த வீதியால் பயணிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான வீதிகள் செப்பனிடப்படும் இந்தக் காலப்பகுதியில், இந்த வீதி இன்னமும் திருத்தப்படாதுள்ளது மிகக் கவலையளிப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (63)




# புற்றுநோய்க்கு தாவர மருந்து

ஐரோப்பாவில் புற்றுநோயாளர்களுக்கான மருந்தாகச் சில தாவரங்கள் பயன்படுகின்றன. தற்போது டன்டேலியன் தாவரம் ஒன்று புற்றுநோய்க்குரிய மருந்தாக றோயல் தாவர ஆராய்ச்சி மையத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்தத் தாவரப் பூவானது - புற்றுநோயை எதிர்க்கின்ற மருந்தைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. வருடா வருடம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் புற்றுநோயால் இறந்து கொண்டிருக்கின்றார்கள்.



தகுந்த மருந்து இல்லாத குறையால் இந்த இறப்பைக் கட்டுப்படுத்தமுடியாதிருப்பதாக மருத்துவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

20 விஞ்ஞானிகள் சேர்ந்து பிரித்தானியாவில் தாவரங்கள் சிலவற்றை ஆராய்ந்தார்கள்.

அதிலே அவர்கள் புற்றுநோய்க்கு மருந்தாக அமையக்கூடிய தாவரங்களில்தான் கூடிய கவனம் செலுத்தினார்கள்.

இந்த வகைத் தாவரங்களின் கட்டமைப்பை ஆராய்ந்து பார்த்தபோது, அவற்றிலே நோய்களை எதிர்க்கக்கூடிய கலங்கள் காணப்படுகின்றன. கலியம் எனப்படும் கலம் ஒன்று தாவரத்தில் காணப்படுகின்றது. இது புற்று நோயை எதிர்க்கக்கூடிய தன்மைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இதேவேளை நீரிழிவு நோயைக் குணப்படுத்தக்கூடிய ஒருவகையான கலங்களும் இங்கே காணப்படுகின்றன.

இவை பக்றிரீயா, பங்கசு ஆகிய நுண்ணங்கிகளைத் தாக்கக்கூடியது என மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

# வாழைப்பழத்தில் எரிபொருள்

அவுஸ்ரேலிய நாட்டில் வாழைப்பழங்களுக்குப் பலத்த கிராக்கி ஏற்படுகின்றது. வாழைப்பழங்களிலே காணப்படும் ஒரு வகைப் பொருள் மூலம், எரிபொருளை உருவாக்கமுடியும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



இதன் காரணமாக அவுஸ்ரேலியாவில் சமையல் எரிவாயுவுக்குப் பதிலாக இந்த எரிபொருளே பாவிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஏறக்குறைய 500 வீடுகளில் இந்த எரிபொருட்களின் பாவனை தொடங்கிவிட்டது. நம் நாட்டில் அழுகிய வாழைப்பழங்களுக்கு பெறுமதியே இல்லை. ஆனால், அங்கே அழுகிய வாழைப்பழங்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றது. இவை அழுகும்போது அங்கே மெதேன் வாயுவை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது.

இந்த மெதேன்வாயு மின்சாரப் பிறப்பாக்கிகளை உருவாக்குவதுடன், குயிள்ஸ்லாந்து என்ற இடத்தில் மட்டும் 20 ஆயிரம் தொன் வாழைப்பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

60 கிலோகிராம் பழங்களில் 30 மணித்தியாலம் வரையில் வெப்பத்தை உருவாக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

# புதுமையுடன் மோட்டோரோலா

மோட்டோ ரோலா கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனையை அதிகரிக்கத் தற்போது புதிய உத்திகள் கையாளப்பட்டுக் கொண்டுவருகின்றன. இது 3ஜி கம்பனியுடன் இணைந்து செயற்படுகின்றது. ஒரு வகையான செயற்பாடாகத்தான் இருக்கின்றது. 2005 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜப்பான் நாட்டில் இந்தவகையான கையடக்கத் தொலைபேசிகள் அதி உன்னத வேகம் கொண்ட வலையமைப்புச் செயற்பாடுகளுடன் வர இருக் கின்றன. தற்போது காணப்படுகின்ற கையடக்கத் தொலைபேசிகளுக்கு வேகம் போதாது என்ற குறைபாடு இருக்கின்றது.




இவற்றை நிவர்த்திசெய்வதற்கு என்ரிரி மற்றும் டுகோமோ நிறுவனங்கள் டிஜிற்றல் முறைமூலம் வேகத்தையும், திறனையும் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன.

ஆனால், இப்படியான அம்சங்களுடன் சந்தைக்கு வருகின்ற கையடக்கத் தொலைபேசிகளின் விலை சற்று அதிகமாகத்தான் இருக்கும் எனக் கூறப்படுகின்றது. இந்தத் திட்டம் வெற்றியளிக்குமாக இருந்தால், மொபைல் தொலைபேசி உலகில் மோட்டோரோலா விட்ட இடத்தை நிரப்பிவிடும். ஜி.எஸ்.எம் மற்றும் ஜி.பி.ஆர்.எஸ் சேவைகளைக் கூடுதலாக விரும்பும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை யாளர்களுக்கு இவை வேகமாகவும், துல்லியமாகவும் கிடைக்கப் போகின்றதென்றால் சொல்லவே தேவையில்லை.

# விண்வெளி விபத்து இல்லை

கடந்த பெப்ரவரி மாதம் 2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற விண்வெளி விபத்துக்குப் பிறகு, ஒவ்வொரு விண்வெளி ஓடங்களும் மிகத் துல்லியமான முறையில் ஆராயப்பட்டு, விண்ணில் செலுத்தப்படுகின்றன. 1600C க்கும் அதிகமான வெப்பநிலையுடைய இடங்களுக்கு, விண்வெளிக்கலங்கள் பயணம் செய்யும்போது சில பழுதுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. தற்போது நாஸா விண்வெளி ஆய்வுமையத்தில் பல கமராக்கள் பூட்டப்பட்டு, ஒவ்வொரு கமராவும் துல்லியமாக விண்வெளிக்கலங்களைப் பழுதுபார்க்கின்றன. இந்தத் திட்டம் மார்ச் அல்லது ஏப்ரல் மாதமளவில் 2005 ஆம் ஆண்டில் பூர்த்தியாகிவிடும் எனவும், இதன்மூலம் வான்வெளியில் விண்வெளிக்கலங்கள் வெடித்துச் சிதற வேண்டிய அவசியம் இருக்காது. நாஸாவினால் ஏவப்பட்ட 15 விண்வெளிக்கலங்கள் அண்டவெளியில் இருக்கின்றன. தற்போது அவற்றிலே காணப்படுகின்ற பிழைகளை விண்வெளியில் வைத்தே கண்டறியும் பணியில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதன்மூலம் பாரிய அனர்த்தங்களைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது. கூடுதலான கவனம் எரிபொருள் தாங்கியிலேயே செலுத்தப்பட்டிருக்கின்றது.



# எலும்பும் உணவுகளும்

தற்போது ஜேர்மன் நாட்டில் வளர்ந்த மனிதர்களில் - முதுகுப்புறமாக ஒரு எலும்பு வளர்ச்சியடைந்திருக்கின்றது. இதற்குரிய காரணத்தைக் கண்டறியும் முயற்சியில் வைத்தியர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த வளர்ச்சி சில உணவுகளாலேயே ஏற்படுகின்றன. சிலருக்கு இது புற்றுநோயினாலேயே ஏற்பட்டிருக்கின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. 56 வயதுடைய ஒரு வயோதிபர் ஆரம்பத்தில் பாண் மற்றும் இறைச்சி ஆகியவற்றைச் சாப்பிட்டார்.



அப்போது அவருக்கு முதுகில் புற்றுநோய் ஏற்பட்டு, அந்த முதுகெலும்பு ஒன்று சத்திரசிகிச்சைமூலம் அகற்றப்பட்டது. இப்போது அவர் மென்மையான உணவுகளையும், சூப் உணவுகளையும் சாப்பிடுகிறார்.

இது அவருக்குரிய உணவு என வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. சிலருடைய எலும்புகள் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இதற்குரிய மருந்தாக டைட்டானியம் பிளேட் எலும்புகளாகப் பயன்படுத்தப்படுகின்றது. சில வேளைகளில் இந்த எலும் புச் சிதைவுகளைக் கண்டறிவது கடினம்.

ஆதலால் 3டி கணினி அமைப்பின் மூலம் ஸ்கான் செய்யப்பட்டு, வைத்தியர்களினால் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

அதன்மூலம் எலும்புகளுக்குரிய குறைபாடு கண்டறியப்படுகின்றது.

# திரை விமர்சனம்

## சவுண்ட் பார்ட்டி



சத்யராஜ் உடைய படங்கள் அடிக்கடி வருவதால் அவரை மக்கள் மறக்கவில்லையோ என்னவோ நினைத்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

பெற்றோர் இல்லாத பெரும்பண்ணையார் சத்யராஜ். அவர் மாளிகை போன்ற வீட்டில் தனியாளாக வாழ்கின்றார். பிளஸ் டு தேர்வில் முதலிடத்தில் வந்த மாண்வி பிரதியூஷாவினை, பல இடையூறுகளையும் தாண்டி சத்யராஜ் டொக்டருக்குப் படிக்க வைக்கிறார். இதன் காரணமாக பிரதியுஷா சத்தியராஜ் மேல் மதிப்பும், மரியாதையும் கொள்கிறார்.

இதனை சத்யராஜ் தவறாக நினைத்து, பிரதியுஷா தன்னை விரும்புவதாக எண்ணங்கொள்கிறார். டொக்டராக ஊர்திரும்பும் பிரதியுஷாவுக்கு மருத்துவமனை கட்டிக்கொடுக்கின்றார். ஒரு நிலையில் பிரதியுஷா தன்னைக் காதலிக்கவில்லை எனத் தெரிந்ததும் அவரைத் தன் காதலை ஏற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துகின்றார்.

வழமைபோல சத்தியராஜினை நகைச்சுவையை மட்டும் நம்பிக் களமிறக்கியிறக்கின்றார்கள். ஆனால், வழமையாக இப்படியான படங்களை அடிக்கடி பார்த்துப் பார்த்துப் புளித்துப்போய் விட்டதால், ஒரு சலிப்பு ஏற்படுகின்றது. வில்லனாக இளவரசு நடித்திருக்கிறார். பிரதியுஷாவின் அம்மாவாக சபீதா ஆனந் நடித்திருக்கின்றார். ஆனால் அவரைப் பொருத்தமான முறையில் பாவிக்கவில்லை என்ற குறை இருக்கின்றது. ஆனாலும், சத்தியராஜ் வழக்கமான லொள்ளு வசனங்களுக்கு மவுசு குறையவில்லை அழகிய பிரதியுஷாவின் இறுதிப்படம். பிரதியுஷாவின் அப்பாவாக தயாரிப்பாளர் ஜீ.ஆர்.நடித்திருக்கிறார். சத்தியராஜ் உடைய நண்பர்களாக மணிவண்ணன், வடிவேலு, மயில்சாமி ஆகிய நகைச்சுவைக் குளுக்கோசுகள் நடித்திருக்கின்றன. தேவாவின் இசையில் சில பாடல்கள் பரவாயில்லை. இயக்குநர் ஆர்த்திகுமார் திரைக்கதையில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாம்.

சவுண்பார்ட்டி சவுண்டில்லை.

- PNS -

# நாட்டுக்குள் படையெடுக்கும் காட்டுக் கிளிகள்

இறைவன் படைப்பு அற்புதமானது. ராஜகம்பீரத்துடன் நடைபயிலும் வனவிலங்குகள் சிறகடித்து வானில் வலம்வரும் வண்ணப்பறவைகள். விண்ணை முட்டும் மலையின் உச்சியிலிருந்து, கொட்டும் நீர்வீழ்ச்சி, நீண்டுயர்ந்து, கிளைபரப்பி நிமிர்ந்து நிற்கும் விருட்சங்கள்.



காற்றில் தலையசைத்து, கண்சிமிட்டும் அழகு மலர்கள் என்று இறைவனின் படைப்பாற்றலை எங்கும் எதிலும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால், வேகமாக வளருவதாகச் சொல்லிக் கொள்ளும் மனிதன், இந்த இயற்கை அழகை சிதைத்துக் கொண்டிருப்பதுதான் இன்றைய நிஜம்.

பச்சைக்கிளிகளின் பூங்காவாக லண்டன் மாறத் தொடங்கியிருப்பது, மலரையும் அதிசயத்தில் ஆழ்த்தி இருக்கின்றது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியின் முடிவில் - இங்கிலாந்திலுள்ள காட்டுக்கிளிகளின் தொகை 30 வீதத்தால் வருடா வருடம் அதிகரித்து வருவதாகக் கண்டறிந்து இருக்கிறார்கள். தெற்கு ஆசியாவுக்குச் சொந்தமான பல கிளி இனங்கள் லண்டன் மாநகரத்தின் சுற்றுப்புறங்களில் வந்து குடிகொள்ளத் தொடங்கிவிட்டதாக இவர்கள் ஆய்விலிருந்து தெரியவருகின்றது.

கடுங்குளிர் காலம் - அண்மைக் காலங்களில் இல்லாததும், கிளிகளைப் பிடித்துண்ணும் உயிரினங்கள் மிகக் குறைவாகவே இருப்பதும், கிளிகளுக்கு மனிதர்கள் உணவளிப்பதும் கிளிகள் தொகை அதிகரிப்பதற்குக் காரணம் என்கிறார்கள்.

# வேண்டாத வெட்டுக்கிளிகள்

அளவில் சிறியதுதானே என்று நாம் பல தடவைகளில் பலவற்றை அலட்சியம் செய்வதுண்டு. ஆனால், அதே சிறுசுகள் ஒன்றுகூடும்போது பலம் மிக்கவையாகி விடுகின்றன.



தனியனாக எதிர்கொள்ளாமல் ஒரு படையாக வந்துமோதும்போது இதன் தாக்கங்கள் பெரியளவில் ஏற்பட்டுவிடுகின்றன.

வெட்டுக்கிளி என்பது ஒரு சிறிய உயிரினந்தான். ஆனால், இந்தச் சிறிய உயிரினம் படையெடுத்து வரும்போது பெரு நாசத்தை விளைவித்து விடுகின்றன. பெருமளவு விவசாயிகள் இவற்றின் படையெடுப்பால் ஆட்டம் கண்டு போயிருக்கின்றார்கள். விவசாயிகள் ஒரு மோசமான காலகட்டத்தில் இருக்கும்போது இந்த வெட்டுக்கிளிகளின் தொல்லையும் வந்து சேர்கிறது.

# இணையற்ற இணையவலங்கள்



உலகம் கண்டுவிட்ட வேகமான வளர்ச்சியின் பிரவேசங்களின் ஒன்றாகக் கணினி திகழ்ந்து வருகின்றது. இந்தக் கணினிமூலம் ஏற்பட்டுள்ள இணையவலம், உலகை நன்றாகவே சுருக்கி விட்டுள்ளது. விரல் நுனியில் விந்தையான உலகத்தை முன்னிறுத்தி வைக்கின்றது. கண்முன்னே விரியும் இந்தத் தகவல் களஞ்சியத்தில், எந்த விடயங்களுக்கும், என்றுமே பஞ்சம் இருப்பதில்லை. அந்த அளவுக்கு எல்லா விடயங்கள் பற்றிய தகவல்களும் இங்கே தேடுதல் வேட்டையில் உடனுக்குடன் கிடைத்து விடுகின்றன.

இன்று உலகளாவிய ரீதியாக இந்த இணையவலம் பற்றி நோக்கும்போது, ஆங்கில மொழிப்பக்கங்களை அதிகமானவர்கள் வலம்வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு புள்ளி விபரத்தின்படி, 173.1 அமெரிக்கர்கள் இணையவலம் வந்தபடி இருக்கின்றார்களாம். ஆனால், ஆங்கில மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அமெரிக்கர்கள். மாத்திரம் அல்லவே. கனடா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியா, அயர்லாந்து, நியூஸிலாந்து என்று மற்றைய ஆங்கில மொழிபேசும் நாடுகளையும் எடுத்துக் கொண்டால், இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கின்றது. இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் போன்ற நாட்டவர்களிலும் ஆநேகமானவர்கள் ஆங்கில மொழிப் பக்கங்களையே வலம்வருகின்றார்கள் என்ற காரணத்தால், இந்தத் தொகை 262 மில்லியனை எட்டிப் பிடிக்கின்றது. இவற்றைவிட இன்னும் பல நாடுகளில் ஆங்கில அறிவுள்ளவர்கள், ஆங்கிலப் பக்கங்களை நாடுவது இங்கு கணக்கில் கொள்ளப்படவில்லை.

# அரிதாகி விட்டவை அழிந்துவிடுமோ?

மனித படைப்பு ஒருபக்கம் இருக்க, இறைவனின் படைப்பிலும் நம்மைச் சுற்றியோடும் நாலுகால் விலங்கினங்களையும், நமக்கு மேலே சிறகடித்துப் பறக்கும் புள்ளினங்களையும் பார்க்கும்போது, இறைவனின் சிருஷ்டியின் அற்புதம் நமக்கு நன்றாக விளங்கிவிடும்.



எத்தனை வர்ணங்களில், எத்தனை வடிவங்களில் இவை நம்மைச் சற்றி வருகின்றன. ஒவ்வொன்றும் ஒரு தனி அழகோடு நம் க்ண்களைக் கவருகின்றன. குறிப்பாக - அடர்ந்த காடுகளுக்குள் நுழைந்தால், அங்கே சுதந்திரமாக உலாவித் திரியும் மிருகங்கள் தான் எத்தனை, பட்சிகள் தான் எத்தனை?

கண்நிறைந்த அழகு நிறைய இருந்தும், கண்கெட்ட இந்த மனிதர்கள் இவற்றை அழிப்பதிலேயே குறியாக இருப்பது கவலைக்குரிய விடயந்தான். இந்த அழகு பொக்கிஷங்களை தமது ஆதாயத்துக்காகக் கொன்று குவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். மிருகங்கள் பல அழிந்துகொண்டே இருக்கின்றன. இன்னும் சில தசாப்தங்களில் பல பட்சிகள், மிருகங்கள் வெறும் சித்திரங்களாகி விடுமோ என்ற பயம் இப்பொழுது எழுந்திருக்கின்றது.

ஓராங் உட்டான் என்பது இராட்சத உருவமுடைய ஒரு குரங்காகும். இந்த இனக் குரங்குகள் இன்னும் இரு தசாப்த காலத்தோடு ஒரேயடியாக அழிந்து விடும் அபாயம் தோன்றியிருக்கின்றது. மலேசியா, சுமத்திரா, ஜாவா போன்ற இடங்களில் காணப்படும் இந்த இனக் குரங்குகள் ஒரேயடியாக அழிந்துவிடப்போவது பலரையும் கலவரத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றது. 1987 ஆம் ஆண்டில் இந்த இனக் குரங்குகள் 45000 தொடக்கம் 60000 வரையில் இருந்திருக்கின்றன. இந்தத் தொகை 2001 ஆம் ஆண்டில் 25000 தொடக்கம் 30000 வரைக் குறைந்துள்ளன என வாழ்வைப் பேணும் அமைப்பின் கணிப்பின்படி 14 வருடங்களில் 50 வீதமானவை அழிவடைந்துள்ளன.

எனவே, இந்த வேகத்தில் மேலும் இந்த மிருகங்கள் அழிந்தால், 20 வருடங்களின் பின்னர் ஒன்றைக்கூட கண்ணில் காணமுடியாது.

# கண் கவரும் கடலரசி

பணம் பத்தும் செய்யும் என்பார்கள். பலதும் பத்தும் செய்யக்கூடிய இந்தப் பணம் இருப்பது மனிதனுக்குப் பல சொகுசுகளை வாழ்க்கையில் தேடிக்கொள்ள உதவுகின்றது. (புதுப்புது வியாதிகளையும் தேடிக்கொள்ள முடிகின்றது என்பது வேறு விடயம்). மாட்டுவண்டிச் சாவாரியுடன் திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியிருந்தவனுக்கு, இன்று



நவீன விமானங்கள், மின்சாரரயில் வண்டிகள் என்று பற்பல நவீன வசதிகள் வந்து சேர்ந்திருக்கின்றன. பாய்மரக் கப்பல் இருந்த இடத்தில், பிரமாண்டமான கப்பல்கள் வந்துள்ளன. பயணம் செய்யும் வாகனங்களே ஒரு குட்டி வீடாகி, நவீன வசதிகள் நிறைந்து காணப்படுகின்றன.

இந்த வரிசையில், குயீன் மேரி - 2 என்று அழைக்கப்படும் இராட்சதக் கப்பலொன்று, சொகுசு விரும்பிகளுக்காக வந்து சேர்ந்திருக்கின்றது. உழைத்த பணத்தை வாரிக் கொட்ட இது பணக்கார உலகத்துக்கு மிகப் பொருத்தமான இடமாக இருக்கப்போகிறது.

அப்படி இந்தக் கப்பலில் என்னதான் விஷேடம் என்று கேட்க வருகின்றீர்களா? ஒன்றல்ல, இரண்டல்ல. விஷேடம் என்று பலவற்றை அடுக்கிக் கொண்டு போகலாம். உலகத்தில் இன்று வரை கட்டப்பட்ட பயணிகளுக்கான கப்பல்களில் மிக உயரமானதும், நீளமானதும் என்ற பெருமை குயீன் மேரி - 2 என்ற இந்தக் கப்பலைத்தான் சேருகின்றது. நீரின் மட்டத்தில் இருந்து 23 மாடிகளை, இந்தக் கப்பலில் கட்டியெழுப்பி இருக்கின்றார்கள் என்று கூறும்போது, நம்மை வியப்புடன் அண்ணாந்து பார்க்க வைக்கும் இந்தக் கப்பலின் உயரம் எவ்வளவு என்பதை உங்களால் உணரமுடியும். இதன் நீளத்தை நீங்கள் கற்பனையில் பார்க்க நினைத்தால், லண்டன் மாநகரின் தெருக்களில் ஓடித்திரிகின்ற 36 பஸ் வண்டிகளை ஒன்றன்பின் ஒன்றாக இணைத்துப் பாருங்கள். அந்த அளவு கொண்டது இந்தக் கப்பலாகும்.




# மாங்குளம் பிரதான தபால் நிலையம் புனரமைக்கப்படாததால் பெரும் சிரமம்

(மாங்குளம்)

மாங்குளம் பிரதான தபாலகம் புனரமைக் கப்படாததால், தனியார் கட்டடம் ஒன்றில் மிக நீண்டகாலமாக பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் படையினர் தபாலகத்தை சூழ்நிலை கொண் டிருந்த போது, தபாலகமும் அருகில் உள்ள வேறு பல கட்டடங்களும் அழிக்கப்பட்டன.

இதன்போது இந்தத் தபாலகம் வவுனிக் குளம் உபதபால் அலுவலகத்தில் இயங்கி, பின்னர் யோகபுரம் உபதபாலகத்தில் இடமாற் றப்பட்டு, மீண்டும் மாங்குளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றியதை அடுத்து, தற் போது தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

இந்தத் தபாலகம் இன்னும் புனரமைக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ருபெல்லா தடுப்பு மருந்து வழங்கல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ருபெல்லா சின்ன முத்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த மாதம் 9,10ஆம் திகதிகளில் ருபெல்லா நோய்த் தடுப்பு கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள் வதற்காக முன்னேற்பாடுகள் நடைபெற்று வரு கின்றது.

1983ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிறந்தவர்களுக் கான தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது. உரியவர்கள் இந்தத் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ளுமாறு மன்னார் சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

### - மன்னார் மாவட்ட -

# முள்ளிக்குளம் மக்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் சிரமம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட முள்ளிக்குளம் பகுதி மக்கள் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள் வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

முள்ளிக்குளம், கங்காணிகுளம், கீலகட் டான் ஆகிய பிரதேசங்களில் 400இற்கு மேற் பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தக் குடும்பங்கள் தமது அடிப்படை வசதி கள், அதாவது கல்வி, மருந்துவம், போக்கு வரத்து போன்ற வசதிகள் இன்றி நீண்டகால மாக பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேபோன்று இரணை இலுப்பைக்குளம், விளாத்திக்குளம் ஆகிய பிரதேசங்களில் உள்ள 350 மேற்பட்ட குடும்பங்களும். மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழுள்ள பிராட்டிக்குளம் கிராமத்தில் 62 மேற்பட்ட குடும்பங்களும், எந்த விதமான அடிப்படை வசதிகளும் இன்றி பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றன.

மேலும் மாந்தை கிழக்கு பிரதேசத்தின் பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப் படாமல் உள்ளதுடன், இந்த வீதியை குறுக் கறுத்துச் செல்லும் பறங்கியாற்றினூடான பாலம் மிகமோசமாக சேதமடைந்துள்ளதாக வும், இதுவரை அதனை புனரமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரி வித்தனர்.

# சிதைக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கல்வியை கட்டியெழுப்ப நடவடிக்கை

தமிழர் தாயகத்தில் போரினால் சிதைக் கப்பட்ட தமிழ் மாணவர்களின் கல்வியை கட்டியெழுப்பும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்பட்டு வருகிறது.

மாணவர்களுக்கு மேலதிக மாலை நேரக் கல்வியை வழங்கும் வகையில், அம்பாறை நாவிதன்வெளி, வீரமுனை, மாணிக்கமடு, வீரச் சோலை ஆகிய பகுதிகளிலும், கிளிநொச்சி ஆலங்கேணி, கரியாலை நாகபடுவான் மற்றும் மன்னார் இலுப்பைக்கடவை ஆகிய பகுதி களுக்கு சூரிய மின்கலத்தொகுதிகளை புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

மேலும் மாணவர்களுக்கு மாலை நேரக் க்ல்வியை வழங்குவதற்காக மேலதிக ஆசிரியா கள் நியமிக்கப்பட்டு, செயற்பாடுகள் நடை பெற்று வருகின்றது. இதன்மூலம் 600இற்கு மேற்பட்ட வறிய மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

### - வவுனியா வடக்கு -

# புளியங்குளம் - நயினைமடு சந்திக்கு இடைப்பட்ட வீதி சேதம்

வவுனியா வடக்கு புளியங்குளம் சந்திக் கும், நயினைமடு சந்திக்கும் இடைப்பட்ட 4 கிலோமீற்றர் தூர வீதி படுமோசமாக சேத மடைந்துள்ளது.

இந்த வீதி குன்றும், குழியுமாக மிக நீண்ட காலமாக காட்சியளிக்கின்றது. இந்த வீதியில் உள்ள பாலம் உடைந்த நிலையில் உள்ளது. இதனால் இந்த வீதியால் பயணிக்கும் மாண வர்கள், நோயாளிகள், வியாபாரிகள் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு வதுடன், விபத்துக்களையும் சந்திக்க நேரிடு கிறது.

எனவே இந்த வீதியை புனரமைப்புச் செய் வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய கல்மடு பிரதேசம்

(வவுனியா)

வவுனியா கல்மடுப் பிரதேசம் கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்த அனர்த்தங் களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு, பின்தங்கிய நிலையிலுள்ளது.

இந்த கல்மடு பிரதேசத்தில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதாக கூறிக் கொள் ளும், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வாக் குறுதிகளை வழங்கிச் செல்கின்றார்களே தவிர, தமக்குத் தேவையான போதியளவு வசதி களையோ, தமது பிரதேசத்தில் புனர்வாழ்வுப் பணிகளையோ மேற்கொள்ளவில்லை என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்ற னர்.

மேலும் கல்மடு பிரதேசத்தில் 119 குடும் பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. எனினும் இந்தப் பிரதேசம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. பாடசாலை களில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் மருத் துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள் இன்றி இந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பகுதி மக்கள் மருத்துவ வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக 20 கிலோமீற்றர் தூரத் துக்கப்பால் உள்ள வவுனியா மாவட்ட மருத் துவமனைக்கு கால் நடையாகவே செல்ல வேண் டியுள்ளது. இதனை சம்பந்தப்பட்ட அதிகாரி கள் கவனத்தில் எடுத்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்தொழிலாளர் தாக்கப்பட்டதை கண்டித்து கண்டனப் பேரணி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்தொழி லில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து, கண்டனப் பேரணி நிகழ்வும், மகஜர் கையளிப்பு நிகழ்வும் இன்று நடை பெறும்.

இந்த மாதம் 1 ஆம் திகதி முல்லைத்தீவு புதுமாத்தளன் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் படகு ஒன்றை கடற்படையினர் தாக்கி, மூழ்கடித்ததுடன் மீன வர்களையும் தாக்கினர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து முல்லைத் தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களும், முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சமா சமும் இணைந்து இன்று பிற்பகல் 3 மணிக்கு கண்டனப் பேரணி ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

மேலும் பேரணியின் இறுதியில் அரச அதிபர் ஊடாக மகஜர் ஒன்றையும் கையளிக்க வுள்ளனர்.

## தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள

(கிளிநொச்சி)

பொதுமக்களால் தவறவிடப்பட்டு ஆய நிறுவனத்தின் நிலையங்களில் கண்டெடுக் கப்பட் அடையாள அட்டைகளை, சம்பந்தப் பட்டவர்கள் தங்களது அடையாளங்களை நிருபித்து மேலாளர், களஞ்சியப் பிரிவு, நடு வப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி என் னும் முகவரியில் பணி நாட்களில் பெற்றுக் கொள்ள முடியும். பெயர்கள் பின்வருமாறு-

சிவநாதன் நிறாஜினி - 856882713v, ஆறு முகம் ஜெயபால - 551530884v, வடுவாவலகே அருண லவன கருணரத்ன - 650551427v, நாக முத்து சிதம்பரப்பிள்ளை - 551801810v, மைக் கல் சூசைப்பிள்ளை - 651211921v, கணபதிப் பிள்ளை செல்வேந்திரராசா - 560430051v, செல்வ நாயகம் யோகேஸ்வரன் - 822955193v, வினா சித்தம்பி விமலேஸ்வரன் - 660803009v, அல் வீனப்பர் அமலசேகரம் - 622151049v; கனக சபை சிறிஸ்கந்தராசா - 551462277v, சிவ நாதன் தவநாயகி - 585463175v, நாகேந்திரம் சந்திரகுமாரன் - 591591665v, சண்முகம் குண நாயகம் - 531564537v, வேலுப்பிள்ளை இராச சேகரம் - 592534258v, வேலாயுதம் கிட்ணம்மா - 605961843v, கந்தசாமி சிவமலர் - 748454-624v, சுப்பிரமணியம் காண்டீபன் - 790663055v, சோதிநாதன் அகில்ராஜ் - 790484339v, இராஜ ரத்தினம் இரத்தினகோபால் - 370052239v, இராசலட்சுமி கணேசன் - 515052526v, தணிகா சலம்பிள்ளை விஷ்ணுகுமார் - 811951455v, வேலு சந்தனம் 512672094x, சிவனு இறா மாய் - 476263298x, குணசீலன் சசிகுமார் - 763064751v, குமாரசாமி ஜெயகௌரி - 6880-50839v, ஈஸ்வரிதேவி இராசத்தினம் - 416060-924v, ஜானக கபில றணசிங்க - 700892409v, சுந்தரம் இராஜேந்திரன் - 593333507v, விஸ்வ ரஞ்சனி ஸ்ரீநேசா - 556641277v, இராசமாணிக் கம் மகேந்திரராசா - 770364965v, சவரிமுத்து இரத்தினகுமார் - 603562917v, ஆனந்தர் தயா னந்தன் - 781084409v, காரியவசம் வடுவன்ன கமகே இந்திராணி குலரேகா - 626001963v, நாகலிங்கம் ஜெயகரன் - 96/BS/05, யோக ராஜா பாலசங்கர் - 2002/A/230, சிந்துஜா துரைசிங்கி - 091041787, நாகபூஷணி சிவ ராசா - 0902015090, நகுலேந்திரன் அருண் மங்கை - 0901022740, மகேஸ்வரி பரராச சிங்கம் - 0907010346, சிங்காரவேலு ஜெய கரன் - 0908020448, பிரேமாவதி குகேந்திரன் - 091023177, மகாலிங்கம் சீவமணி 090701-8687, எஸ்.சஜீதா - 5004, ஆர்.தெய்வானை - 1118, அமரபாலசிங்கம் சந்திரலதா -, டபிள்யு. ஏ.டி.ஏ.ரஞ்சித்குமார் 597151, கோபாலபிள்ளை சிவபாலன் - 69254நி, கனகராஜ் கனகேந்திரம் -டி./எல்.-294273, சுவாமிநாதன் பாலேநதிரம் - என்.டி.எல்.0014399, எவ்.ஜெபசெல்வம் - ஏ-072531, கே.ஜி.ஆர்.பொர்னாண்டோ ஏ-011876 பி.மாறன் - ஜி.கியு-9907, எஸ்.நடராசா - ஆர்.746918, அஞ்சலிங்கம் தர்மதேவா - 34082 (108)

## பிறப்பு இறப்பு பதிவு நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பிறப்பு, இறப்பு பதிவு களுக்கான நடமாடும் சேவை பளை பச்சி லைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை இந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெறும் என பளை பச் சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ்.புத் திரசிகாமணி தெரிவித்தார். இதில் மாவட்டப் பதிவாளர் திருமதி செல்வராசாவும் கலந்து கொள்ளவுள்ளார்.

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம் பெயர்மாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர் வாழ்வுக்கழகம், வலுவுற்றோர் சங்கம் எனப் பெயர் மாற்றி இயங்கவுள்ளது.

இந்தக் கழகத்தினர், ஊனமுற்றோரின் வினைத்திறன் வலுவினால் அதன் பெயரை வலுவுற்றோர் சங்கம் என மாற்றி அமைக்க வுள்ளது.

கிளிநொச்சியில் இயங்கி வரும் இந்தக் கழகத்துக்கு எந்தவித நிறுவனங்களின் உதவி யும் இந்த ஆண்டு கிடைக்கவில்லை. மேலும், இந்தக் கழகம் நன்கொடைகளின் மூலமே இயங்கி வருகின்றது என்பதும், இந்தக் கழ கத்தில் ஊனமுற்றோரின் வினைதிறன் செயற் பாடுகள் நிறைந்து காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### - இலுப்பைக்கடவை பகுதியில் -

# பெரும்பாலான மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகல்

மன்னார் இலுப்பைக்கடவை பகுதியில் பெரும்பாலான மாணவர்கள் தமது பாடசாலை கல்வியை விட்டு இடைவிலகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

மன்னார் இலுப்பைக்கடவைப் பகுதியில் வசிக்கும் பாடசாலை மாணவர்கள் பாடசாலை கல்வியை விட்டு இடைவிலகியமைக்கு அடிப் படை பொருளாதார வசதிகள் இல்லாமையே காரணமாகும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நிறு வனங்கள் இந்தப் பகுதி மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து இந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டவேண்டும் என மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் தெரிவிக் கின்றனர்.



கிளிநொச்சி இரணை மடுப்பகுதியில் போர் நடவடிக் கையின் போது முற்றாக அழிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் தோற்றத்தை படத்தில் காணலாம்.

படம்: தி.தவபாலன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை*
*உறுப்புஓர் அனையரால் வேறு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசுக்கு முண்டுகொடுத்து ஆதரிக்கும் தொண்டமான் அரசியல் பாரம்பரியம்

தாத்தா இப்போது உயிரோடிருந்தால் என்ன செய்திருப்பாரோ அதனை பேரன் கனகச்சிதமாகச் செய்துள்ளார். பேரனின் இந்த முடிவு எப்போதோ எதிர்பார்த்த ஒன்றுதான் என்பதால் இது எந்த வகையிலும் ஆச்சரியமூட்டும் ஒன்றாக இருக்கவில்லை. அவர் இந்த முடிவுக்குவர மூன்று மாதங்களுக்குமேல் எடுத்ததுதான் ஆச்சரியம்.

அதாவது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் அரசுக்கு ஆதரவினை வழங்க எடுத்த முடிவைப் பற்றித்தான் கூறுகிறோம்.

ஒரு கட்சி தான் அரசுக்கு ஆதரவாகவோ, எதிர்க்கட்சிக்கு ஆதரவாகவோ அன்றி தனித்தோ நாடாளுமன்றத்தில் இயங்குவது குறித்துத் தீர்மானமெடுப்பதென்பது அதன் சுதந்திரமான விருப்பைப் பொறுத்ததாகும். அதனை எவரும் இப்படித்தான் செயற்படவேண்டும் என்று வலியுறுத்திக் கூறவோ, நிர்ப்பந்திக்கவோமுடியாது. இதனைத்தான் ஜனநாயக சுதந்திரம் என்று சொல்வார்கள்.

அந்தவகையில், ஆறுமுகம் தொண்டமான் அரசுக்கு ஆதரவளிக்க எடுத்த முடிவு குறித்து கண்டிக்கவோ, விமர்சிக்கவோ நமக்கு எந்த முகாந்திரமும் கிடையாது. எனினும், அது தொடர்பான சில கருத்துக்களை வெளிப்படையாகக் கூறும் உரிமை எவருக்கும் இருக்கவே செய்கிறது அதுவும்கூட ஜனநாயக சுதந்திரத்தின் ஓரு அங்கமேயாகும்.

அந்தவகையில் அவரது இந்த முடிவு குறித்த சில எண்ணங்களை இங்கு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் தவறு கிடையாது. எப்போதுமே எல்லோர்க்கும் ஒரு பொதுவான அபிப்பிராயம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பற்றி உறுதியாக இருந்துவருகிறது என்பது உண்மையேயாகும். அது அக்கட்சியின் ஸ்தாபகரும், தொழிற்சங்கத் தலைவருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில் இருந்தே அவரது அரசியல் நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகளின் அடிப்படையில் உருவான கருத்துநிலையேயாகும்.

பெரும்பாலும் அவர் ஆளும்கட்சி எதுவோ அல்லது பெரும்பான்மைப் பலம்கொண்ட கட்சி எதுவோ அந்தக் கட்சியுடன் ஏதோ ஒருவகையில் சமரசமாகி, உடன்பாடு கண்டு, ஆட்சியில் ஒரு அங்கமாகி அதனை வலுப்படுத்த உதவும் - அரசின் பலத்தை - ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய உதவும் சக்தியாகவே தன்னையும் தனது கட்சியையும் பகிரங்கமாகவே இனங்காட்டி வந்தவர் என்பதில் ஐயமில்லை. அவரை ஆட்சியை உருவாக்குபவர் (Kingmaker) எனப் பலரும் வர்ணிப்பதுமுண்டு.

தேர்தலின்போது ஏதோவொரு பெரும்பான்மைக் கட்சியுடன் தேர்தல்உடன்பாடு செய்துகொண்டு, போட்டியிடும் இ.தொ.கா தேர்தலில் தான் சார்ந்த கூட்டணி தோல்வியுற்று எதிரணி வெற்றிபெற்று அது அரசமைக்கும் வலுவை கொண்டிராவிட்டால் எந்தவிதமான வெட்கமோ, கூச்சலோ, குற்ற உணர்வோ ஏதுமின்றி அக்கட்சிக்கு ஆதரவளித்து ஆட்சியில் பங்கு கொண்டியங்குவதற்கு முடிவெடுக்க அவர் தயக்கம் காட்டியதே இல்லை.

அதேபோல் எந்த எதிர்க்கட்சியும் அவரை உள்வாங்கிக் கொள்ள பின்நின்றதும் இல்லை.

எல்லா அரசாங்கத்திலும் அமைச்சராக இருந்தவர் அவர். எந்த ஆளும்கட்சியுடனும் இணைந்து தனதுமலையக மக்களுக்கான உரிமைகளை சிறிது சிறிதாகவேனும் பெற்றுக் கொடுப்பதே தனது நோக்கமென்றும் அவர் கூறுவதும் வழக்கம்.

ஆனாலும், பல தசாப்தகாலம் ஆளும் கட்சிகளுடன் ஒன்றி-அமைச்சுப்பதவிகளில் அவர் இருந்தபோதும் மலையக மக்களின் உரிமைகளை அவர் வென்றெடுத்துக்கொடுத்தாரா? என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதிலாகும்.

தொண்டமானின் பரம்பரை உயர்ந்த அளவுக்கு அவரது தலைமையின் கீழான மக்கள் வளரவில்லை என்றே கூறவேண்டும்.

இப்போது ஆறுமுகன் தொண்டமான் அவரது தாத்தாவின் அரசியல் மூலோபாயத்தை அச்சொட்டாகப் பின்பற்றத் தொடங்கிவிட்டார் என்றே கூறவேண்டும். அவர் அரசுக்குத் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துவிட்டார்.

அதற்கு அவர் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும், அபிவிருத்தி பணிகளை தடையின்றி மேற்கொள்ளவும்தான் அவ்வாறு ஆதரவினை வழங்குவதாகக் காரணமும் கூறியுள்ளார்.

இதுதான் உண்மையான காரணமா என்பது உறுதிப்படுத்தப்படவேண்டிய விடயமேயாகும்.

சமாதான முயற்சிகளை ஆதரிக்கவும், அபிவிருத்தியை முன்னெடுக்கவும் அரசோடு இணைந்து தான் செயற்படவேண்டுமென்றில்லை. எதிர்க்கட்சியில் இருந்தவண்ணமே அவற்றிற்கு ஆதரவை வழங்கமுடியும்.

ஆனால், ஆறுமுகன் தொண்டமானின் ஆதரவு அறிவிப்பானது வேறு உள்நோக்கங்களையும் கொண்டதாக இருக்கும் என்ற சந்தேகமும் நியாயமானதே. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான விடுதலைப்புலிகளின் கோரிக்கையை ஆதரவளிப்பதாகக் கூறும் இ.தொ.கா அதனை முழு மூச்சுடன் எதிர்க்கும் கட்சிகளை உள்ளடக்கிய அரசுக்கு எப்படி ஆதரவளிக்கமுடியும்? அதேபோல் உண்மையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த கருத்தியல் நிலைப்பாட்டில் இ.தொ.கா உறுதியாக இருக்குமேயானால் அதனை எப்படி அரசு அரவணைத்துக் கொள்ளும்.

இவை இரண்டுமே சர்ச்சைக்குரிய சந்தேக வினாக்கள் தான்.

இந்த வகையில் இ.தொ.காவின் செயற்பாடுகளை விளங்கிக்கொள்ளமுடியவில்லை என்ற அரசியற்துறைப் பொறுப்பாளரின் கூற்று சரியான ஒன்றாகவே உள்ளது.

எதுவானாலும் அரசுக்கு ஆதரவளிப்பதென்ற நிலைப்பாட்டை எடுத்துள்ள தொண்டமானின் செயற்பாடுகள் கட்டபொம்மனைக் காட்டிக்கொடுத்த புதுக்கோட்டை அரசர் ராஜராஜ ராஜாதிராஜ விஜயரகுநாத தொண்டமானின் நடவடிக்கைகள் போன்று இருக்காது என நம்புவோமாக...!

அப்படி இருந்தால் வரலாறு அவரை மன்னிக்கவே மாட்டாது.

## நாடும் நடப்பும்




## இடமாற்றம் பெற விரும்புகின்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்!

(ஆழியவளை)

இலங்கை ஆசிரியர் சேவையில் இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் மாகாணங்களுக்கு இடையில் இடமாற்றம் பெற விரும்பும் ஆசிரியர்கள், இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன் மூன்று பிரதிகளில் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

மாவட்டங்களுக்கு இடையில் இடமாற்றம்பெற விரும்பும் ஆசிரியர்கள், இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன் இரண்டு பிரதிகளிலும்,

மாவட்டத்திற்குள் இடமாற்றம்பெற விரும்பும் ஆசிரியர்கள் ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதிக்கு முன் இரு பிரதிகளிலும், வலயத்தினுள் இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்கள் ஒக்ரோபர் 25 ஆம் திகதிக்கு முன் இரு பிரதிகளிலும் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்பு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கஷ்டப் பிரதேசத்தில் நான்கு வருடங்கள் கடமை புரிந்தவர்களே வசதியான பிரதேசத்திற்கு இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவராவர். வருடத்தின் இடைக்காலப் பகுதிகளில் இடமாற்றம் எதுவும் செய்யப்படமாட்டாது. (122)

## கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை 10 மில்லியன் செலவில் புனரமைப்பு!

கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை - நிகொட் நிறுவனத்தின் 'போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைக்கும் திட்டத்தின்' கீழ் 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை நிகொட் ஒதுக்கியுள்ளதுடன், விரைவில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என, யாழ். செயலகத்தில் இயங்கும் நிகொட் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதடியில் உள்ள சித்த ஆயுர்வேத வைத்தியசாலையானது கடந்தகாலங்களில் இடம்பெற்ற யுத்தத்தினால் பெரும் சேதமடைந்துள்ளது. இதன் பல கட்டடங்கள் சிதைவடைந்து காணப்படுவதால் நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தினமும் அங்கு சிகிச்சைக்குச் செல்லும் பெருந்தொகையான நோயாளர்கள் அங்கு தங்கிநின்று சிகிச்சைபெற முடியாததால் வீடுகளுக்கே திரும்பிச் செல்லநேரிடுகின்றது. மிக முக்கியமான பாதிப்புக்குள்ளானவர்கள் மட்டுமே அங்கு தங்கவைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றனர்.

இதனால், இங்கு கட்டடப் புனரமைப்பு மற்றும் வசதிகள் குறித்து ஏற்கனவே வைத்தியசாலை நிர்வாகம் நிகொட்டிடம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், தற்போது அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், அந்தப் பணிகளுக்காக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ் மாவட்டத்தில் உள்ள ஆறு பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு நிகொட் நிறுவனமானது 30 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருப்பதாகவும், அந்த நிதி முன்னுரிமை அடிப்படையில் ஆறு பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (ப)

## மிலேனியம் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

(ஆழியவளை)

க.பொ.த உயர்தர வகுப்புக்களில் கல்வி பயிலும் வசதி குறைந்த திறமையுள்ள மாணவர்களுக்கு மிலேனியம் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் மாகாணக் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் 2003 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றி, உயர்தரம் பயிலும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை தமது பாடசாலை அதிபர்களின் ஊடாக, வலயக் கல்வி அலுவலகங்களில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 24 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்திற்கு .அனுப்ப வேண்டியுள்ளதாக மகாணக் கல்விப் பணிப்பாள் தெரிவித்தார்.

கல்வித் தகமை, குடும்ப விபரம், விளையாட்டுத்துறை, போன்றவற்றைக் கவனத்தில் கொண்டே மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

(122)

## குழந்தைகளின் ஆத்மாவைத் தூண்டிவிட அழகெழல் நடவடிக்கைகள் அவசியம்!

(யாழ்ப்பாணம்)

**குழந்தை ம.சண்முகலிங்கம்**

எமது தேசத்தின் குழந்தைகளது உள்ளத்தைத் தூய்மையானதாக, புனிதமானதாக வளர்த்தெடுக்கவேண்டிய தேவை எமக்குண்டு. எங்கள் குழந்தைகளது கனவுகளை நாம் நிஜமாக்கவேண்டும். கனவுகள் அழகானவை, தூய்மையானவை. அவை குழந்தைகளது உள்ளத்தைத் தூய்மையான அழகுடன் வைத்திருக்கும். எமது சமூகம் தனது உடல், உள, ஆத்ம நலத்தைப் பேணிவரும்போது எமது தேசம் அழகு பெறும்.

இவ்வாறு கலாநிதி குழந்தை. ம.சண்முகலிங்கம், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் நடத்திய அழகெழல் போட்டி - 2004 பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளிலிருந்தும் வருகைதந்திருந்த மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான கல்வியியற் கல்லூரி சமூகத்தினர் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், அவர் மேலும் தெரிவிக்கையில் -

கலைகளில் ஈடுபடுவதற்கு கற்பனை மிக அவசியம். கற்பனைகள் நல்ல கனவுகளைத் தரும். இந்தக் கனவுகள், கற்பனைகள் - உள அழகைத் தரும் ஆத்மாவைத் தூண்டி நிற்கும்.

இன்று எமது பிள்ளைகள் பாவம். அதிகாலை முதல், இரவுவரை ஓடி, ஓடிப் படிக்கவே நேரம் சரியாக இருக்கிறது. இந்த நிலையில் அவர்களால் எங்கே அழகை ரசிக்கமுடிகிறது. எமது பாடசாலைகளில் கற்றல் கற்பித்தலின்போது பல்வேறு வில்லங்கங்கள் ஏற்பட்டு விடுகின்றன. பாடங்களது கற்றல்-கற்பித்தலுக்கு அப்பால் கற்பிப்பவர் கற்பவரினுடைய ஆத்மாவைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளிலும் ஈடுபடல் வேண்டும். ஆத்மாவைத் தூண்டிவிட அழகெழல் நடவடிக்கைகள் மிகமிக அவசியமாகின்றன.

குழந்தைகள் நிறைந்த கனவுகளுடனேயே தமது செயல்களைச் செய்கின்றன. கனவுகள் கற்பனைகளைத் தோற்றுவிக்கின்றன. கற்பனைகளே வளர்ச்சியின் முதற்படியாகின்றன என்றும் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் மேலும் குறிப்பிட்டார். (31)

பொருண்மியம் வணிகன்

# மின்வலு நெருக்கடியும் உற்பத்திப் பாதிப்பும்

மின்சார வலுவானது ஒரு அடிப் படை வளமாக தற்போது காணப்படு கின்றது. ஏனெனில், நிறுவனத்துக்கு மின்சார வளமானது - உட்கட்ட மைப்பு வளமாகக் கருதப்படுவது டன், வீட்டு பாவனையாளரும் மின் சார உபகரணங்களிலேயே பெரிதும் தங்கியுள்ளனர்.

இதனால், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வலு முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வளவு கடந்த சில வருடங்களுக்கு முன் மிகப் பெரிய சவாலை எதிர்நோக்கியது என்பது யாவரும் அறிந்ததே. இதன் அடிப் படையிலேயே இந்தக் கட்டுரை வரை யப்படுகின்றது.

இந்த மின்சார நெருக்கடி திடீ ரென ஏற்பட்ட ஒரு பிரச்சினை என்பது ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாகும். ஏனெனில், இந்த நெருக்கடி கடந்த ஒன்றரை தசாப்தங்களாக கட்டி யெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின் றன.

1980 ஆம் ஆண்டு - மின்சார வளங்கலில் தனியுரிமை கொண் டதாக காணப்பட்ட இலங்கை மின் சாரசபை - நீர்மின் உற்பத்தியில் பாரிய முதலீடுகளைச் செய்தது. ஆனால், திருப்தியற்ற காலநிலை காரணமாக மின்சக்தி வழங்களில் 1990 ஆம் ஆண்டு மின்சார தளங்க ளைப் பரவலாக்க வேண்டிய தேவை தோற்றம் பெற்று இருந்தது.

இதன் பயனாக பரிந்துரைக்கப் பட்ட வெப்ப மின்வலு பொறிக்கான முதலீட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்ட போதிலும், அத்திட்டங்கள் ஏனைய பொறிகளின் பிரதியீட்டினால் கால தாமதப்பட்டன.

இதன் பயனாக இலங்கை அதன் மின்சார வளங்கல் வரலாற்றில் 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற எட்டு மணித்தியால மின் வெட்டின் மூலம், நாடு மிக மோசமான இருளினை அனுபவித்ததோடு, அத்தியவசிய மற்ற தேவைகளுக்கான மின்சார பாவனைத் தடையும் நடை முறைக்கு வந்தது.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில், மின்சார நெருக் கடிக்கான சில காரணிகள் அப்ப டியே இருக்கத்தக்கதாக -

1. வலுப்பாவனைக் கட்டுப்படுத்தல்.
2. வாடகைக்கு மின் பிறப்பாக்கி ளைப் பெறல்.
3. மேலதிக இறைக் கட்டணம் விதித்தல்.

ஆகிய காரணிகளால் அதிகார சபை மின்வெட்டைத் தவிர்த்துவந் துள்ளது.

2001 ஆம் ஆண்டு நடுப்பகுதி யில் மீண்டும் மின்சார நெருக்கடி ஏற்பட்டு, அது 2002 ஆம் ஆண்டு வரை நீண்டு சென்றுள்ளது. இதன் போது இலங்கை மின்சாரசபை இரண்டு வகையான நெருக்கடியை எதிர்நோக்கியது.

1. இயலளவுப் பிரச்சினை
2. நிதிப் பிரச்சினை

இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து பிணைந்து காணப் பட்டதுடன் வலுத்துறையின் பொறுப்பு வாய்ந்த தன்மை நம்பகத்தன்மை, என்பவற்றின் மீது பல பிரச்சினைகளை தோற்றுவித்து முகமைத்துவ நெருக் கடிக்கும் இட்டுச் சென்றது.

2001 - 2002 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், இயலளவுப் பிரச்சி னைக்கு உடனடிக் காரணம் 2000 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இருந்து ஏற்பட்ட பருவப் பெயர்ச்சிகளின் செயற் பாடு இன்மையே எனக் கூறப்படு கின்றது.

2001 ஆம் ஆண்டு யூலையில் 1 1/2 மணித்தியாலங்களுடன் ஆரம் பித்து, செப்ரெம்பரில் மிக அதிக நேரமான எட்டு மணித்தியாலமாக மாற்றப்பட்டது. பின்பு காலநிலை சாதக நிலைகாரணமாக 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன் நீக்கப்பட்டு தேர்தலின் பின் டிசெம் பர் மாத நடுப்பகுதியில் மீண்டும் ஒரு மணிநேர மின்வெட்டு அமுல் படுத்தப்பட்டதுடன் அது 2002 ஆம் ஆண்டு 2 1/2 மணித்தியாலங்களாக மேலும் நீடிக்கப்பட்டது.

இதன் பயனாக மின்சார நெருக் கடியின் விளைவுகளை பொருளா தாரத் துறைகளும் பிரதிபலிக்கத் தொடங்கின.

மின்வெட்டு காரணமாக இலங்கை மின்சாரசபை 2001 ஆம் ஆண்டு மட்டும் ரூ1.6 மில்லியனை இழந்தது.

இலங்கை மின்சார சபையால் வாட கைக்குப் பெறப்பட்ட மின்சாரத்துக் காக ரூ2.3 மில்லியனை செலவிட்ட துடன், 2001 ஆம் ஆண்டு தொழிற் பாட்டுப் பற்றாக்குறை 9 பில்லி யனாக அமைந்ததுடன், இலங்கை மின்சார சபையின் கடன் இருப்பு ரூ11 பில்லியனுக்கு உயர்ந்தது.

இலங்கை மின்சார சபை - அர சுக்கு செலுத்தப்பட வேண்டிய வரு டாந்த கடன் தவணைப் பணமாக ரூ4.5 மில்லியனைச் செலுத்த முடி யாத நிலையும் ஏற்பட்டது.

மின்சார வெட்டானது - கைத் தொழிற்துறையில் வெளியீடு, உற் பத்தியின் தரம் மற்றும் தொழி லாளர் உற்பத்தித்திறன் என்பவற் றில் நேரடி பாதிப்பினை ஏற்படுத்தியது. மின்சாரப் பொறிகள், கருவிகள் பழுதடைவதற்கும் மூலதனச் சொத் துக்கள் வெகுவாக அழிந்து போவ தற்குக் காரணமாகியது. 2002 ஆம் ஆண்டு வரையான மின்வெட்டின் தொடர்ச்சி 2002 ஆம் ஆண்டு நடுப் பகுதி வரை உலகப் பொருளாதா ரத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட உச்ச நன்மைகளைப் பெறுவதைத் தவிர்த்தது. நாட்டில் பெரும் பொருளா தார பாதிப்பினை ஏற்படுத்தியது.

இவ்வாறு பாதிப்பினை ஏற்படுத் தியதற்கு மின்வெட்டின் காலநிலை சீரின்மை (எதிர்பார்க்கப்பட்ட பயன் கிடைக்காமை) மட்டும் காரணியாக காணப்படவில்லை. கட்டுப் படுத்த கூடிய காரணிகளும் இதற்கு காரணி யாக அமைந்துள்ளது அவையாவன -

1. முடிவுகளை மேற்கொள்ள முடியாமை.
2. போதுமான இயலளவுக்கு விரிவாக்க திட்டமிடப்பட்ட மின்சாரப் பொறிகளை நிறுவ அதிகாரசபை தவறியமை.
3. குறைவான தீர்வைக் கொள்கையை செயற்படுத்துவதன் மூலம் அதிகளவு மின்சாரத்தை பாவிப்பதற்கு ஊக்குவித்தமை.

எப்படியாயினும், 1993 ஆம் ஆண்டிலேயே முன்னெடுப்பாடாக எதிர்வு கூறப்பட்டிருந்ததோடு, 300 மெகாவாட் வெப்ப மின்வலுப் பொறி ஒன்றை மாவெல்ல பகுதியில் நிறு வத் திட்டமிட்டு இருந்தது.

இது அரசியல் மற்றும் சமூகச் சூழல் குழுக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டதுடன், மேல் கொத் மலை மின்திட்டமும் - சூழல் குழுக் களின் எதிர்ப்பினால் தடுக்கப்பட்டது. இந்த இரண்டு திட்டங்களும் நடை முறைப்படுத்த முடியாது போனதால் மாற்றுத் திட்டமாக 2001 அம் ஆண்டு 165 மொகாவாட் இயலளவி னைக் கொண்ட இரு இணைநத சுழற்சி மின் செயற்றிட்டங்களை நிறுவுவ தற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

இவையும் தாமதமானதே இந்தப் பிரச்சினை தோன்றக் காரணமாக அமைந்துள்ளது. இப்போது மின்சார சபை எதிர் நோக்கம் மிக முக்கிய பிரச்சினை யாதெனில் அதிகம் பயன் படுத்தப்படுகின்ற நேரங்களில் மின் சாரத் தேவைகளைச் சமாளிப்பதா கும்.

மின்சார சபை பின்வரும் சவால் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவைக ளும் ஏற்பட்டுள்ளன.

1.அதிகம் பயன்படுத்தப்படுகின்ற நேரங்களில் மின்சார தேவைகளைச் சமாளிப்பது.

2. அடிக்கடி பொறிகள் பழுதடை தல் பொருத்தமான நேரங்களில் பேணல் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப் படாமை.

3.மின்சார சபைக்கு செயல்முறை நட்டங்களை குறைக்க அல்லது சமாளிக்க முடியாத நிலை.

4. நிதிப் பிரச்சினை.

மீண்டும் ஒரு மின்சாரநெருக்கடி 2004 - 2005 ஆம் ஆண்டுகளில் ஏற்படலாம் என வல்லுனர்கள் சுட் டிக்காட்டுகின்றனர்.

எனவே, பின்வரும் செயற்பாடு கள் செயற்படுத்தப்படவேண்டும் என 2001 ஆம் ஆண்டு பிரேரிக்கப்பட் டது.

1. 2002 ஆம் ஆண்டின் இறுதி யில் 200 மெகாவாட்டினால் விரிவு படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

2. 2002 - 2004 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சேர்க்கப்பட விருக்கின்ற பிரதான செயற்திட்ட மான குகுலேகங்க (70 மெகாவாட்) அமைப்பது.

3. 2004 ஆம் ஆண்டு - புத்தளத் தில் 300 மெகாவாட் கொண்ட வெப்ப மின்வலு திட்டத்தின் முதலாவது கட்டத்தை செயற்படுத்துவது.

4. 150 மெகாவாட் கொண்ட இணைந்த சூழற்சி மின் பொறி 2004 ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன் செயற்படுத்தல்.

இது 2001 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் ஆண்டிறிக்கையில் குறிப் பிடப்பட்ட திட்டங்கள் ஆகும். இவற் றின் படி - திட்டங்கள் நிறைவேற் றப்பட்டால்தான், 2004 - 2005 ஆம் ஆண்டு மின்வெட்டினை தடுக்கமுடி யும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இனி மின் வெட்டா? ஆமா, இல்லையா தெரியவில்லை.

இத்துடன், 2001 ஆம் ஆண்டில் ஏற்பட்டதுபோன்று ஏற்படாமல் இருக்க - அவசரமாக மின்பிறப்பாக் கிகளை வாடகைக்குப் பெறல், பாவ னைக்கு உதவாத மின் பிறப்பாக்கி களை சீர்செய்தல், முக்கியத்துவ மற்ற துறைக்கு தேசிய மின் உற் பத்தியில் இருந்ததான மின்சாரப் பாவனையை தடை செய்தல் போனற நடவடிக்கைகளையும் மேற்கொள் ளல் வேண்டும். எதிர்கால மின்சார நெருக்கடிகளை தவிப்பதற்கு, அவசர நடவடிக்கைகளை எடுப்பது அவசிய மாகும்.

இத்துடன், போட்டித்தன்மை நம் பகத் தன்மையுடன் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை மீது - மின் சார தீர்வை, ஏனைய ஆசிய நாடுகளு டன் ஒப்பீடுகையில் அதிகமாகவே உள்ளது.

எனவே, புதிய தீர்வை கொள் கைகளை அமைப்பதுடன் - சூரிய சக்தி, காற்று, இணைந்த சூழற்சி தொழில் நுட்பம், விடுபட்ட நற்திட்டங் களை யும் செயற்படுத்த வேண்டி யுள்ளது. ஏனெனில்,

1. புதிதாக வடக்கு- கிழக்கு மகாணங்களுக்கு மின்சாரம் வழங்கு தல்,

2. புதிய கைத்தொழில் நிறுவ னங்களின் வருகையும், மின்சார கேள்வி அதிகரிப்பும்.

3. சமாதானச் சூழலால் முதலீடு கள் அதிகரிப்பு

4. சனத்தொகை அதிகரிப்பு

இவற்றினைக் கருத்திற கொண்டு, சம்பந்தப்பட்ட தரப்பினர் மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை தடுக் கும் பொருட்டு, மின் வெட்டை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சி.சிவானந்தராஜா

பதிவுகள்...

# அழகெழில் 2004; ஒரு நோக்கு



யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் நுண்கலைத்துறை யின் ஏற்பாட்டில், யூலை 24, 25 ஆம் திகதிகளில் கல்லூரி வளாகத் தில் 'அழகெழல் 2004' போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அழகியற்கல்வியை மேம்படுத் தும் நோக்கோடு ஏற்பாடு செய்யப் பட்ட இந்தப் போட்டிகளில் கிராமிய இசை, கிராமிய நடனம், சிறுவர் நாடகம், தனி நடிப்பு, சித்திரம் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன.

முதலாம் நாள் - கிராமியப் பாடல், கிராமிய நடனம் போன்ற போட்டிகள் இடம் பெற்றன. இந்தப் போட்டிகளில் முறையே 24, 21 போட்டிக் குழுக்கள் பங்குபற்றின.

கிராமிய உடையோடு, சிறுவர் கள் போட்டி மனப்பான்மையுடன் மகிழ்ச்சிகரமாக இந்த நிகழ்வுகளில் பங்கெடுத்தனர். எல்லாமாக அன் றைய நாள் போட்டிகளில் 350 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில்- சித்திரம், சிறுவர் நாடகம், தனி நடிப்பு ஆகிய போட்டிகள் இடம் பெற் றன.

சிறுவர் நாடகப்போட்டிகளில் 24 போட்டிக் குழுக்கள் பங்குபற்றியிருந் தன. ஒவ்வொரு குழுவிலிருந்தும் 20 மாணவர்கள் பங்கெடுத்து, இயல் பாக நடித்து சிறப்பாக ஆற்றுகை செய்தனர்.

தனி நடிப்பு போட்டியும் சிறப் பாய் இடம்பெற்றது. இதில், 33 பேர் பங்குபற்றி, சிறப்பாய் ஆற்றுகை செய்தனர்.

சித்திரப் போட்டிகள் தர அடிப் படையில் ஐந்து பிரிவுகளாக பிரிக் கப்பட்டு, போட்டிகள் இடம் பெற்றன.

இதில் 500 வரையான போட்டி யாளர்கள் பங்கு பற்றியிருந்தனர். ஒவ்வெரு சித்திரமும் ஒவ்வொரு வகையினதாக, சிறந்த படைப் புக்களாக மிளிர்ந்தன.

மாணவர்களின் மன எழுச்சியை யும், கனவையும் பிரதிபலிப்பனவாக சித்திரங்கள் திகழ்ந்தன.

இந்தப் போட்டிகளில் பங்கு பற்றி, சிறந்த முறையில் பரிசில் களை பெறுகின்ற மாணவர்களுக் கான பரிசளிப்பு விழா - செப்ரெம்பர் 4 ஆம் திகதி கல்லூரி வளாகத்தில் இடம் பெறுகின்றது.

மூன்று இடங்களை பெற்றவர்க ளுக்கு மட்டுமல்லாமல், மேலும் 10 போட்டியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.

சிறந்த சித்திரங்கள் காட்சிப் படுத்தப்படுவதோடு, அரங்க நிகழ்வு கள் ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

அழகியற் கல்வித்துறையின் ஒரு பெரும் எழுச்சியை ஏற்படுத் தியபோல பல பாடசாலைகளிலிருந் தும் மாணவர்களை தயார்படுத்தி வழிப்படுத்தி பங்கெடுக்கச் செய் தமை ஒரு மகிழ்வான விடயமாகும்.

பாடசாலை மட்டத்திலும, தொடர்ந்து சிறுவர் மத்தியிலும் அழகியல் சார் போட்டிகளை ஏற்படுத் தியோ அல்லது ஆற்றுகைகளைச் செய்தோ சிறுவர்கள் மத்தியில் கலை உணர்வை மேம்படுத்த ஆசிரி யர்கள் முயலவேண்டும்.

அழகியல் கலைகள் மனச் சோர்வை அகற்றி உற்சாகம் தரு வன. 'அவற்றை மாணவர் மத்தியில் வளர்ப்பதன் ஊடாக நாம் உற்சாக மான ஒரு எதிர்கால சமூகத்தை கட்டி வளர்க்க முடியும்'

கலைத்துறை சார்ந்த ஆசிரி யர்கள் - இந்த வகையான முயற்சி களில் ஈடுபடுவதன் ஊடாக, தம் ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியி யல் கல்லூரியின் அழகெழலோடு இணைந்து போட்டிகளில் பங்கெடுத் தவர்கள் தொடர்ந்தும் ஆக்க முயற்சி களில் ஈடுபட்டு சிறந்த கலை வெளிப் பாடுள்ளவர்களாகத் திகழவேண்டும்.

சிறந்த கலை வெளிப்பாடுள்ள சமுதாயம் எப்போதும் விழிப்பாக வும், உற்சாகமாகவும் இருக்கும் என்பார்கள். நாமும் விழிப்பாய் இருப்போம், உற்சாகமாகச் செயற்படு வோம்.

இங்கிருந்து எங்கே...

## சூழல் பற்றிய உணர்வு

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சூழல் மாசடைதல் இவை பற்றியெல்லாம் அறிகிறோம், வாசிக்கிறோம். நிறைய விடயங்களைக் கேள்விப்படுகிறோம். எமது சாதாரணமான அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகள் எவ் வளவுதூரம் சுற்றுச்சூழல் பாதுகாப் புக்கு முரணாக அமைந்துள்ளன என்பது பற்றி நாம் பெரிதும் உணர்வதில்லை.

அவ்வாறு உணர்ந்து கொண் டாலும், எதனையும் பெரிதுபடுத்து வதில்லை.

அண்மையில் எமது வீட்டுக் கிணற்றடியை அண்டிய நிலத்தில் மிக நெருக்கமாக வழைகள் வளர்ந் துள்ளதே என்று கருதி, ஓரிரு குட்டிகளைக்கொஞ்சம் தள்ளி நாட் டலாமே என்று இன்னொருவர் உத வியுடன் அந்த முயற்சியில் ஈடுபட் டேன்.

வாழைக்குட்டியைக் கிளப்ப முன்னர் அதை நாட்டப்போகும் இடத்தைத் தெரிவுசெய்து, கிடங் கைக் கிண்டலாம் என முனைந்த போது, பொருத்தமான இடமென்று கருதிய இடத்தில் - ஒரு அடி ஆழத்துக்குக் கிண்டுவதற்குள் ளேயே வில்லங்கம் காத்திருந்தது.

பிளாஸ்ரிக் போத்தல்கள் - உடைவுகள், பால்மா பைகள், பொலித்தீன்கள், ஷொப்பிங் பைகள் என அடுத்தடுத்து வந்துகொண்டி ருந்தன. அந்த இடத்தில் எப் போதோ வெட்டிப்புதைக்கப்பட்ட இவையெல்லாம், சிதைவடையாத புதையல்களாய் வண்ணம் வண்ண மாகச் சிரித்தன.

வீட்டுக்கு இடைஞ்சல் எனக் கழிக்கப்பட்ட இவற்றை, என்றோ ஒரு நாள் எனது வீட்டினர் யாரோ வெட்டிப் புதைத்து இருக்கிறார்கள். கழிவுகளாயினும், 'அழியா வரம் பெற்ற நாம்' என அவையெல்லாம் உயிரோடு இருப்பது கண்டு திகைத் தேன். நிலத்தை மாசுபடுத்தும் காரணிகளுள் இத்தகைய பொருட்க ளைப் புதைப்பதும் ஒன்று என எனது மாணவர்களுக்குக் கற்பித்துவிட்டு, அதே தவறினை நானே இழைத்துள்ளநிலை என்னை உண்மையிலேயே உறுத் தியது.

சாதாரணமாக எம்மிற் பலரிடம் இருக்கிற ஒரு பலவீனம் என்ன வெனில், ஒரு இடைஞ்சல் எதிர்ப் படும்போது, அப்போதைக்கு அதிலி ருந்து விடுபட்டால் போதும் என்ற உணர்வோடு - அவசர அவசரமாக ஒரு தீர்வைத் தேடிக்கொள்ளும் போக்கு ஆகும்.

அந்தத் திடீர்த்தீர்வு நீண்டகால அடிப்படையில் தீங்காக ஆகும் என நாம் அறிவுபூர்வமாக யோசிக்கத் தவறிவிடுகிறோம்.

ஒவ்வொரு செயற்பாட்டிலும் கொஞ்சம் நிதானமாக யோசித்துத் தொழிற்பட்டால், நமக்கேற்படும் சிரமத்தை நாமே தடுத்துக்கொள்ள முடியும்.

ஆனால், நம்மிற் பலர் அப்படி யில்லை. உண்மையிலேயே பிளாஸ் ரிக் பொருட்கள் சூழலை மாசு படுத்துவதில் மிகப பெரும்பங்கு வகிப்பதை நாம் அறிந்திருந்தும், அவற்றை உபயோகிப்பதை நிறுத்த வில்லை.

'ஷொப்பிங்' பைகள், லஞ்ச் பேப்பர்கள் இவையெல்லாம் இன் றைய அவசியதேவைகளின் பட்டி யலில் இணைக்கப்பட்ட பொருட்க ளாகி விட்டன.

விளைவின் தீவிரத் தன்மையை உணர்ந்து, நாம் யாவருமே விழிப் போடு தொழிற்பட்டால், பல நீண்ட கால அடிப்படையிலான தீமைக ளிலிருந்து விடுபடமுடியும்.

ஆனாலும், நாம் அப்படி நடந்துகொள்ள முன்வர மறுக்கி றோம்.

எதுவும் சுலபமாக முடியவேண் டும், கரைச்சலில்லாமல் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த எதிர்பார்ப்போடு தொழிற் படுகையில், பிறருக்கு வரக்கூடிய தீங்கைப் பற்றியல்ல, நமக்கு நமது அடுத்த தலைமுறைக்கு நேரக்கூடிய தீங்கைப் பற்றிக்கூட நாம் பெரிதாகக் கவலைப்பட மாட்டோம்.

சுலபமாய், சௌகரியமாய் நோய்க்கும் - சாவுக்கும் பாதை வகுத்துக் கொள்ளும் ஞானிகளாகி வருகிறோமா நாம்.

♦

- ந.சத்தியபாலன்

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

318. யா/ந/ 10560 திருமதி. ரஜனி சிவகுமார்
319. யா/ந/ 10672 திரு.சின்னப்பு கந்தசாமி
320. யா/ந/ 10716 திருமதி. இரத்தினம்மா
தாமோதரம்பிள்ளை
321. யா/ந/ 10725 திரு. கந்தையா காராளசிங்கம்
322. யா/ந/ 10726 திரு. சின்னத்தம்பி தியாகராஜா
323. யா/ந/ 10736 திரு. கார்த்திகேசு செல்லையா
ராஜசிங்கம்
324. யா/ந/ 10737 திருமதி. தங்கரத்தினம்
சிவராமலிங்கம்
325. யா/ந/ 10745 திருமதி. பொன்னம்மா கந்தையா
326. யா/ந/ 10782 திரு. வைத்திலிங்கம்
சுப்பிரமணியம்
327. யா/ந/ 10785 திருமதி. மனோன்மணி
சின்னத்தம்பி
328. யா/ந/ 10820 திருமதி. ஜெயாநிதி அன்ரன்ஜோர்ஜ்
329. யா/ந/ 10832 திரு. நாகலிங்கம்
திருஞானசம்பந்தன்
330. யா/ந/ 10851 திரு. சின்னத்துரை கிருஸ்ணசாமி
331. யா/ந/ 10865 திருமதி. மனோன்மணி
சரவணமுத்து
332. யா/ந/ 10880 திரு. சுப்பிரமணியம்
தர்மராஜேஸ்வரன்
333. யா/ந/ 10912 திரு. வேலுப்பிள்ளை சின்னையா
334. யா/ந/ 10954 திரு. அப்புக்குட்டி விசுவலிங்கம்
335. யா/ந/ 10975 திரு. நாகலிங்கம் கனகரத்தினம்
336. யா/ந/ 10985 திருமதி. மங்கையற்கரசி தம்பிஜயா
337. யா/ந/ 11001 திருமதி. தங்கம்மா தம்பிராசா
338. யா/ந/ 11022 திரு. சுப்பிரமணியம் சிறிகாந்தா
339. யா/ந/ 11038 திருமதி. செல்லம்மா
பாலரத்தினராசா
340. யா/ந/ 11046 திருமதி. கனகாம்பிகை
தம்பிப்பிள்ளை
341. யா/ந/ 11054 திருமதி. இராசலட்சுமி பாலசிங்கம்
342. யா/ந/ 11064 திருமதி. அன்னம்மா சின்னத்தம்பி
343. யா/ந/ 11068 திரு. இராமலிங்கம் வேலுப்பிள்ளை
344. யா/ந/ 11111 திரு. குறெப்ரன் கிறிஸ்தோபர்
345. யா/ந/ 11131 திருமதி. மகேஸ்வரி பாக்கியநாதன்
346. யா/ந/ 11178 திருமதி. இரத்தினம்மா குட்டித்தம்பி
347. யா/ந/ 11238 திருமதி. நாகசௌபாக்கியம்
சிவசம்பு
348. யா/ந/ 11248 திருமதி. சரஸ்வதி சின்னையா
349. யா/ந/ 11279 திருமதி. மங்கையர்க்கரசி
பாலசுப்பிரமணியம்
350. யா/ந/ 11334 திரு. செல்லப்பா இராசசுந்தரம்
351. யா/ந/ 11355 திருமதி. செல்லம்மா நாகரட்ணம்
352. யா/ந/ 11399 திரு. நவசிவாயம் சபாரட்ணம்
353. யா/ந/ 11411 திரு. ஆறுமுகம் வைத்தியநாதன்
354. யா/ந/ 11425 திருமதி. மகாலட்சுமி பாலப்பிள்ளை
355. யா/ந/ 11485 திருமதி. மாணிக்கம்மா கார்த்திகேசு
356. யா/ந/ 11500 திரு. கனகம்மா சின்னத்துரை
357. யா/ந/ 11506 திருமதி. சாரதாதேவி மகேந்திரன்
358. யா/ந/ 11526 திருமதி. மாணிக்கம் சின்னையா
359. யா/ந/ 11527 திருமதி. இராசம்மா ஜயம்பிள்ளை
360. யா/ந/ 11546 திரு. சபாரத்தினம் கனகராசா
361. யா/ந/ 11552 திருமதி. இரத்தினம் இராசையா
362. யா/ந/ 11568 திரு. வேலுப்பிள்ளை நடராசா
363. யா/ந/ 11577 திரு. வீரகத்திப்பிள்ளை நாகலிங்கம்
364. யா/ந/ 11643 திருமதி. முத்தம்மா செல்லத்துரை
365. யா/ந/ 11698 திருமதி. சிரோன்மணி செகநாயகம்
366. யா/ந/ 11726 திருமதி. சரசுவதி பொன்னம்பலம்
367. யா/ந/ 11738 திரு. விநாயகமூர்த்தி நவரத்தினம்
368. யா/ந/ 11750 திரு. கணேசபிள்ளை கைலைவாசன்
369. யா/ந/ 11760 திரு. செல்லத்துரை சிவபாதசுந்தரம்
370. யா/ந/ 11809 திரு. சபாபதி இராசலிங்கம்
371. யா/ந/ 11831 திருமதி. சின்னம்மா முத்தையா
372. யா/ந/ 11855 திருமதி. நாகரத்தினம் பொன்னையா
373. யா/ந/ 11883 திரு. கந்தையா கனகசபாபதி
374. யா/ந/ 11884 திரு. ஆறுமுகம் இளையதம்பி
375. யா/ந/ 11889 திரு. கந்தையா கருணாகரன்
376. யா/ந/ 11962 திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை
377. யா/ந/ 11974 திரு. வேலாயுதம் இராசேந்திரம்
378. யா/ந/ 12008 திரு. கந்தையா நடராசா
379. யா/ந/ 12050 திருமதி. தர்மநாயகி சிதம்பரநாதன்
380. யா/ந/ 12065 திருமதி. தங்கச்சியம்மா நடராசா
381. யா/ந/ 12081 திரு. இளையதம்பி செல்லத்துரை
382. யா/ந/ 12084 திரு. கதிரேசு விசுவலிங்கம்
383. யா/ந/ 12102 திரு. வல்லிபுரம் கணேசு
384. யா/ந/ 12158 திருமதி. இராசம்மா சுப்பிரமணியம்
385. யா/ந/ 12182 திருமதி. மகேஸ்வரி வைத்திலிங்கம்
386. யா/ந/ 12186 திரு. சின்னையா சிவக்கொழுந்து

## யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு

1. யா/யா/ 136 திருமதி. றஞ்சினிதேவி சற்குணராஜா
2. யா/யா/ 264 திரு. நடராசா சுவர்ணராசா
3. யா/யா/ 272 திரு. சிவஞானம் வெற்றிவேலாயுதம்
4. யா/யா/ 301 திருமதி. ஜெயமணி டேவிட்
5. யா/யா/ 349 திருமதி. சீதேவிப்பிள்ளை
சுப்பிரமணியம்
6. யா/யா/ 362 திரு. இராசையா லோகநாதன்
7. யா/யா/ 445 திரு. நாகலிங்கம் கந்தையா
8. யா/யா/ 518 திரு. சூசையோன் மனுவற்பிள்ளை
9. யா/யா/ 561 செல்வி. புனிதவதி சிவஞானம்
10. யா/யா/ 612 திருமதி. மகேஸ்வரி குமாரசுவாமி
11. யா/யா/ 727 திருமதி. அருளானந்ததேவி
மேகநாதன்
12. யா/யா/ 739 திரு. வேலுப்பிள்ளை சிவஞானம்
13. யா/யா/ 779 செல்வி. வணஜா மார்க்கண்டு
14. யா/யா/ 850 திரு. முருகேசு சிறீபத்மநாதன்
15. யா/யா/ 873 திரு. சுப்பர் கந்தையா
16. யா/யா/ 995 திரு. சூசைப்பிள்ளை அலெக்சாண்டர்
17. யா/யா/ 1029 திரு. அன்ரனிபிரான்சிஸ்
கிளரன்ஸ்பெனடிற்
18. யா/யா/ 1069 திரு. பிலிப் வேதநாயகம்
19. யா/யா/ 1094 திரு. ஜோச் இராசரத்தினம் தோமஸ்
20. யா/யா/ 1109 திரு. சுவாம்பிள்ளை கிறிஸ்தோப்பர்
21. யா/யா/ 1153 திரு. யுவக்கீம்பிள்ளை
அருள்நாயகம் டோமினிக்
22. யா/யா/ 1177 திரு. ஆசீர்வாதம் மத்தியூஸ்
23. யா/யா/ 1241 திரு. ஐயம்பிள்ளை சின்னராசா
24. யா/யா/ 1245 திரு. பிலிப் யோசப்
25. யா/யா/ 1260 திருமதி. விக்ரோறியா
செபஸ்தியாம்பிள்ளை
26. யா/யா/ 1322 திரு. சுப்பையா திருக்கேஸ்வரன்
27. யா/யா/ 1379 திரு. வின்செனற் அன்ரனி எமில்
பாலசிங்கம்
28. யா/யா/ 1407 திரு. சின்னையா செல்லத்துரை
29. யா/யா/ 1409 திரு. தாமோதரம்பிள்ளை
இரத்தினசபாபதி
30. யா/யா/ 1419 திருமதி. நல்லம்மா சந்திரசேகரம்
31. யா/யா/ 1449 திருமதி. சுவானுப்பிள்ளை சிங்கராயர்
32. யா/யா/ 1475 திரு. பசுபதிப்பிள்ளை கதிரவேலு
33. யா/யா/ 1503 திருமதி. ஜேட்ரூட் சொர்ணம்மா
ஜோசப்
34. யா/யா/ 1506 திரு. சின்னட்டியர் பரமலிங்கம்
35. யா/யா/ 1553 திருமதி. ஞானேஸ்வரி ஜெயதேவன்
36. யா/யா/ 1576 திரு. அந்தோனிபிள்ளை
ஞானப்பிரகாசம்
37. யா/யா/ 1626 திருமதி. சவுதாமினி குணசீலன்
38. யா/யா/ 1662 திரு. ஆறுமுகம்பிள்ளை
தட்சணாமூர்த்தி
39. யா/யா/ 1663 திரு. துரையப்பாசெட்டி சீனிவாசகம்
40. யா/யா/ 1669 திரு. நாராயணன் ஆனந்தன்
41. யா/யா/ 1708 திருமதி. அன்னம்மா பொன்னையா
42. யா/யா/ 1721 திரு. ஆழ்வார் செல்லையா
43. யா/யா/ 1791 திரு. இராமனாதன் சாமுவேல்
அரியரெத்தினம்
44. யா/யா/ 1877 திரு. செல்லத்துரை ஸ்ரீபதி கந்தராசா
45. யா/யா/ 1926 திருமதி. சிசிலியா மைக்கல்
46. யா/யா/ 1955 திரு. பொன்னம்பலம் செல்லத்துரை
47. யா/யா/ 1982 திரு. நல்லையா மூத்ததம்பி
48. யா/யா/ 1983 திரு. நல்லதம்பி விசுவலிங்கம்
சரவணமுத்து
49. யா/யா/ 2051 திரு. பத்திநாதர் டேவிற்சற்குணராஜா
50. யா/யா/ 2054 திரு. இராயப்பு வேதநாயகம்
51. யா/யா/ 2055 திருமதி. நவமணி சண்முகம்
52. யா/யா/ 2091 திரு. அந்தோணிப்பிள்ளை
இம்மனுவேல்
53. யா/யா/ 2145 திரு. கபிரியேல் மாட்டீன்
54. யா/யா/ 2154 திரு. அருளப்பு ஸ்ரனிஸ்லோஸ்
55. யா/யா/ 2250 திரு. கனகரெத்தினம்
சிவபாதசுந்தரம்
56. யா/யா/ 2251 திரு. சாமுவேல் செல்லையா
57. யா/யா/ 2354 திரு. செபஸ்ரியாம்பிள்ளை கனியூட்
58. யா/யா/ 2459 திரு. யுவானிஸ் அருள்ஞானசீலன்
59. யா/யா/ 2476 செல்வி. புஸ்பதேவி லோறன்ஸ்
சேனாதிராசா
60. யா/யா/ 2607 திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம்
61. யா/யா/ 2617 திருமதி. திரேசம்மா ஸ்ரனிஸ்லாஸ்
62. யா/யா/ 2661 திரு. ஜோர்ஜ் இராஜரட்ணம் தோமஸ்
63. யா/யா/ 2701 திருமதி. சசிதரா சிறீகணேஷ்
நடராஜா
64. யா/யா/ 2735 திருமதி. சிவானந்தம் சரவணமுத்து
65. யா/யா/ 2744 திரு. முருகப்பர் கந்தப்பன்
கந்தையா அருள்பிரகாசம்
66. யா/யா/ 2747 திருமதி. ஞானப்பூ இராமநாதன்
67. யா/யா/ 2755 திருமதி. விஜயகுமாரி கமலநாதன்
68. யா/யா/ 3042 திரு. யோசேப்பு ஞானப்பிரகாசம்
69. யா/யா/ 3130 செல்வி. விக்ரறின்செல்வி
இராஜரட்ணம்
70. யா/யா/ 3172 திருமதி. மனோன்மணி
சிவசுப்பிரமணியம்
71. யா/யா/ 3179 திருமதி. மேரிறோசலின் டேவிற்
72. யா/யா/ 3183 திருமதி. கசில்டா மங்களநாயகி
மரியாம்பிள்ளை
73. யா/யா/ 3192 திருமதி. அந்தோனியா சாமிநாதர்
74. யா/யா/ 3193 திருமதி. அந்தோனியா சாமிநாதர்
75. யா/யா/ 3262 திருமதி. கத்தரீன் அருளானந்தம்
76. யா/யா/ 3269 திருமதி. திரேசா லில்லிமலர்
சாமுவேல்
77. யா/யா/ 3295 திரு. கார்த்திகேசு ஆறுமுகம்
78. யா/யா/ 3338 திரு. சந்தியோ டொமினிக்
லோறன்ஸ்
79. யா/யா/ 3591 திரு. மனவல் அருளப்பு
80. யா/யா/ 3600 திருமதி. அமலறாணி ஜோக்கிம்பிள்ளை
81. யா/யா/ 3619 திரு. நமசிவாயம் நடேசன்
82. யா/யா/ 3652 திருமதி. மணி சின்னராசா
83. யா/யா/ 3721 திரு. சித்திவினாயகர் ஆறுமுகம்
நவரெட்ணம்
84. யா/யா/ 3829 திரு. வல்லிபுரம் திரவியம்
85. யா/யா/ 3840 திருமதி. அன்னம்மா நீக்கிலாஸ்
86. யா/யா/ 3859 திருமதி. தயாமணி நவரத்தினம்
87. யா/யா/ 3873 திருமதி. இராசம்மா சோமசேகரம்
88. யா/யா/ 4003 திரு. சிவஞானசுந்தரக்குருக்கள்
கிருபானந்தசர்மா
89. யா/யா/ 4009 திரு. ஆறுமுகம் செல்லையாபிள்ளை
90. யா/யா/ 4052 திரு. சவிரிமுத்து நீக்கிலாம்பிள்ளை
91. யா/யா/ 4094 திரு. சந்தியாப்பிள்ளை
லூக்கேஸ்பிள்ளை
92. யா/யா/ 4180 திருமதி. நவமணி இராசரத்தினம்
93. யா/யா/ 4193 திரு. சேவியர் மரியோ செபஸ்ரியன்
தங்கராசா சிற்றம்பலம்
94. யா/யா/ 4273 திருமதி. பிரியதர்ஷினி
மகேந்திரராஜா
95. யா/யா/ 4316 திரு. யோசேப் இம்மனுவல்
96. யா/யா/ 4382 திருமதி. மேரிபிலிப்பா வில்லியம்
97. யா/யா/ 4430 திருமதி. இமெல்டா இராஜசிங்கம்
98. யா/யா/ 4523 திரு. சின்னையா துரைராசா
99. யா/யா/ 4563 திரு. சூசைப்பிள்ளை
பிரான்சிஸ்பிள்ளை அல்போன்ஸ்
100. யா/யா/ 4581 திருமதி. சரஸ்வதி சிவகுருநாதன்
101. யா/யா/ 4592 திருமதி. இளையபிள்ளை
வேலாயுதம்
102. யா/யா/ 4649 திரு. சின்னப்பு பொன்னம்பலம்
103. யா/யா/ 4698 திரு. சாமுவேல் பென்சமின்
104. யா/யா/ 4718 திரு. சிவப்பிரகாசம் இராசசூரியர்
105. யா/யா/ 4750 திருமதி. பரமேஸ்வரி ஜேசுதாசன்
106. யா/யா/ 4780 செல்வி. தனபாலசரஸ்வதி
சபாரெத்தினம்
107. யா/யா/ 4811 திரு. ஆறுமுகம் அருளம்பலம்
108. யா/யா/ 4836 திரு. அருணாசலம் பற்குணம்
109. யா/யா/ 4848 திரு. கணபதிப்பிள்ளை பூவிலிங்கம்
110. யா/யா/ 4867 செல்வி. விக்டோறியா ஞானம்மா
சொலமன்
111. யா/யா/ 4869 திரு. இராமு விணாசித்தம்பி
112. யா/யா/ 4881 திரு. நாகலிங்கம் தம்பிராசா
113. யா/யா/ 4928 திரு. அருணாசலம் கனகேந்திரன்
114. யா/யா/ 4941 திரு. யோவாம்பிள்ளை ஏபிரகாம்
மூத்ததம்பி
115. யா/யா/ 4945 திருமதி. சிசிலியா தேவதாஸ்
116. யா/யா/ 4993 திருமதி. கமலாம்பிகை நடராசா
117. யா/யா/ 5015 திருமதி. புளோறன்றி வல்லிபுரம்
118. யா/யா/ 5020 திரு. மருசலீன் இன்பநாதன்
119. யா/யா/ 5057 திரு. யோசேப் யேசுதாசன்
120. யா/யா/ 5061 திரு. யோசுவா சிங்கரட்ணம்
121. யா/யா/ 5069 திரு. கஸ்பார் வஸ்தியாம்பிள்ளை
122. யா/யா/ 5118 திரு. சண்முகம் நாராயணசுவாமி
123. யா/யா/ 5135 திரு. நாகநாதர் சுப்பையா
124. யா/யா/ 5138 திருமதி. தங்கரெத்தினம் சிவஞானம்
125. யா/யா/ 5144 திரு. வெற்றிவேலு நடராசா
126. யா/யா/ 5154 திரு. கந்தையா இராசரத்தினம்
127. யா/யா/ 5189 திரு. திருஞானசம்பந்தர்
சண்முகசுந்தரம்
128. யா/யா/ 5206 திருமதி. சத்தியபாமா விவேகானந்தா
129. யா/யா/ 5208 திரு. செல்லத்துரை லோகேஸ்வரன்
130. யா/யா/ 5210 திரு. கணபதிப்பிள்ளை
கிருஷ்ணபிள்ளை
131. யா/யா/ 5236 திரு. முருகேசு செல்லையா
132. யா/யா/ 5243 திருமதி. இராசமணி நாகரத்தினம்
133. யா/யா/ 5250 செல்வி. தங்கமுத்து குழந்தை
134. யா/யா/ 5290 திரு. வெள்ளைச்சாமி முத்தையா
135. யா/யா/ 5302 திரு. யோசப் அந்தோனிப்பிள்ளை
136. யா/யா/ 5303 திரு. மாணிக்கம் சண்முகநாதன்
137. யா/யா/ 5304 திருமதி. யேற்றூட் ஆசைப்பர்னாந்து
138. யா/யா/ 5326 திரு. அருளப்பர் மரியாம்பிள்ளை
139. யா/யா/ 5333 திரு. கண்ணப்பன் சின்னப்பூச்சி
140. யா/யா/ 5340 திரு. பிற்றர் அல்பேட் அலோசியஸ்
141. யா/யா/ 5341 திரு. சுப்பையா ஐயாத்துரை
142. யா/யா/ 5352 செல்வி. எஸ்தர் சூசைப்பிள்ளை
143. யா/யா/ 5361 திருமதி. பொன்னம்மா கந்தையா
144. யா/யா/ 5375 திரு. முருகேசு வேலுப்பிள்ளை
நவரத்தினம்
145. யா/யா/ 5378 திரு. தம்பிராசா யேமிசிங்கம்
146. யா/யா/ 5402 திரு. மருசலீன் ஜோசேப்
147. யா/யா/ 5425 திருமதி. கொறற்றி றஞ்சினி
வென்சஸ்லாஸ்
148. யா/யா/ 5446 திரு. மரியான் சூசைப்பிள்ளை
149. யா/யா/ 5449 திருமதி. டொறத்தி வலன்ரைன்
150. யா/யா/ 5519 திரு. வெங்கட்ராமன் நாராயணசாமி
151. யா/யா/ 5523 செல்வி. றூபி அக்கினஸ்
ஜோன்பிள்ளை
152. யா/யா/ 5530 திருமதி. ரூபி அரியரத்தினம்
153. யா/யா/ 5535 திரு. பொன்னு கந்தையா
154. யா/யா/ 5583 திரு. கபிரியல் பப்ரிஸ்ற்
155. யா/யா/ 5638 திருமதி. மாகிறெட் யோண்
156. யா/யா/ 5671 திருமதி. மங்கையற்கரசி அம்பாள்
மயில்வாகனம்
157. யா/யா/ 5679 திரு. சுந்தரம் ஞானசுந்தரம்
158. யா/யா/ 5841 திருமதி. போலின் சின்னையா
159. யா/யா/ 5865 செல்வி. உதயவர்ணி தங்கராஜா
160. யா/யா/ 5878 திருமதி. நேசம்மா இளையதம்பி
161. யா/யா/ 5920 திருமதி. மாகிறேற் இமானுவேல்
162. யா/யா/ 5938 திரு. கந்தையா மகேஸ்வரன்
163. யா/யா/ 5952 திருமதி. யோன்சி டொனிசியஸ்
164. யா/யா/ 5956 திருமதி. மேரியோசேப்பின்
இரத்தினம் பிரான்சிஸ்
165. யா/யா/ 6025 திரு. தம்பிமுத்து பரராசசிங்கம்
166. யா/யா/ 6039 திருமதி. பாக்கியம் வேலுப்பிள்ளை
167. யா/யா/ 6044 திருமதி. பொன்னம்மா
பாலசுப்பிரமணியம்
168. யா/யா/ 6051 திரு. எமிலியஸ் பிளேவியன்
169. யா/யா/ 6090 திரு. செல்வரத்தினம்
சிறீஸ்கந்தரத்தினம்
170. யா/யா/ 6168 திருமதி. பிலோமினா டேவிற்
171. யா/யா/ 6216 செல்வி. மதிவதனி சின்னத்தம்பி
172. யா/யா/ 6218 திரு. சுப்பையா மாணிக்கம்
173. யா/யா/ 6225 திரு. யோசப் இம்மானுவேல்
துரைசிங்கம்கிறிஸ்தோபர்
174. யா/யா/ 6249 திருமதி. செல்லம் சின்னத்தம்பி
175. யா/யா/ 6255 திரு. ஆறுமுகம் நடேசு
176. யா/யா/ 6263 திரு. ஆறுமுகம் இராசையா
177. யா/யா/ 6270 திருமதி. அன்னம்மா முத்துத்தம்பி
178. யா/யா/ 6289 திருமதி. பாக்கியம் துரையப்பா
179. யா/யா/ 6312 திரு. சுந்தரம்பிள்ளை சிவராசா
180. யா/யா/ 6325 திரு. மயில்வாகனம் பொன்னுத்துரை
181. யா/யா/ 6411 திரு. இராமநாதர் சம்பந்தநாதன்
182. யா/யா/ 6420 திருமதி. மரியம்மா அலேஸ்
183. யா/யா/ 6444 திரு. ஜேக்கப் விக்ரர் பெஞ்சமின்
184. யா/யா/ 6460 திரு. ஏபிரகாம்பற்றிக்ஸ் பிரின்ஸ்
எதிர்மனசிங்கி
185. யா/யா/ 6478 திரு. சந்தியாப்பிள்ளை
செபஸ்தியாம்பிள்ளை
186. யா/யா/ 6488 திருமதி. ஆச்சிமுத்து கனகரத்தினம்
187. யா/யா/ 6501 திரு. ஆறுமுகம் செல்லையா
(அருளப்பு )
188. யா/யா/ 6541 திரு. சவரிமுத்து சின்னப்புநாயகம்
189. யா/யா/ 6577 திரு. அம்பலம் முத்துக்குமார்
190. யா/யா/ 6587 திருமதி. செல்லம்மா விஸ்வலிங்கம்
191. யா/யா/ 6593 திரு. ஆனந்தகுமார் யூலியன்
192. யா/யா/ 6599 திருமதி. சாரதா கனகசுந்தரம்
193. யா/யா/ 6604 திருமதி. லில்லி றெஜினா
பிரான்சிஸ்ஒவ்மேரி
194. யா/யா/ 6608திரு. சுப்பிரமணியம் கதிர்காமநாதன்

(நாளை தொடரும்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கரடியனாறு துப்பாக்கிச்சூடு; புலிகள் முற்றாக நிராகரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாறில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் சிலர் காயமடைந்ததாக வெளியான செய்திகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

கருணா குழுவினால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பிலுள்ள சிங்கள ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

கருணா பிரச்சினை ஏற்பட்ட பின்னர் குறிப்பிட்ட சில சிங்கள ஊடகங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை, பொய்யான பரப்புரைகளை செய்து வருகின்றமை தொடர்பாக அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலக இணைய தளத்தில் தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில்!

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தினை முடிவுககு கொண்டுவருவதற்காக நடத்தப்பட்ட மற்றுமொரு பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பிற்கு இடையில் இப்பேச்சுவார்த்தை நேற்று இடம்பெற்றது.

இந்தபேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தமையால் தமது வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும் என அனைத்துப் பல்கலைக்கழக ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் 1150 ரூபா கொடுப்பனவை உயர்த்துவதற்கு அதிகாரிகள் யோசனை தெரிவித்தபோதும் அதனை ஏற்கமுடியாது என அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## திருமலையில் புதிய முகாம்களை புலிகள் அமைக்கவில்லை! கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

திருகோணமலையில் விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்திருப்பதாக வெளியான செய்திகளில் உண்மை எதுவுமில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக - திருகோணமலையில் கடற்படைத் தளத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகள் முகாம்களை அமைத்துவருவதாக அரசாங்கம் குற்றச்சாட்டுக்களை சுமத்திவருகிறது.

ஆனால், அரசாங்கத்தின் இந்தக் குற்றச்சாட்டை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முற்றாக நிராகரித்திருப்பதுடன், புலிகள் தமது பிரதேசங்களிலேயே முகாம்களை அமைத்திருப்பதாகவும் கூறியுள்ளது.

## துப்பாக்கிசூட்டுச் சம்பவத்தில் திருமலையில் ஒருவர் காயம்!

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் காயமுற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திவன்க புத்திக என்ற பொது மகனே இந்தச் சம்பவத்தில் காயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அடுத்த மூன்று...

இரண்டு வருடத்துக்குள் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்க முடியாது. எப்படியும் அடுத்த தேர்தலில் நாம் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

### படையினர்...

இன்று நடைபெறவிருந்த இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவிருந்த விடுதலைப் புலிகள் தரப்புத் தளபதிகள் கேணல் ரமேஷ், ராம், ஜனார்த்தன் மற்றும் கௌசல்யன் ஆகியோர் வன்னியில் தங்கியிருப்பதாலேயே இந்தச் சந்திப்பை ஒத்திவைக்க புலிகள் கேட்டதாகக் கூறப்படுகிறது.

சந்திப்புக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என. கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

### விசேட அதிரடி...

இதேவேளை விசேட அதிரடிப் படைக்கு 2000 பேரை புதிதாக சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### விமான எதிர்ப்பு....

விடுதலைப் புலிகள் இந்த ஏவுகணைகளை எங்கு கொள்வனவு செய்தார்கள் என்றோ, எத்தனை ஏவுகணைகள் கொண்டுவரப்பட்டதென்ற விபரமோ இதில் தெளிவாகத் தெரியவில்லை.

கடற்படையினர், விடுதலைப் புலிகளின் ட்றோலர் நிற்கும் இடத்தை சென்றடைய கால தாமதமாகிவிட்டது. பின்னர் அது பாதுகாப்பாக சாலைக் கடற்கரைப் பகுதிக்குச் சென்றுவிட்டது. அங்கு ஆட்லறிகள், பல்குழல் பீரங்கிகள், விமான எதிர்ப்பு பீரங்கிகள் மூலம் கடற்புலிகள் அதற்கு பாதுகாப்பளித்தனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

### எரிபொருள்..

வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விலை அதிகரிப்பு இந்த வார இறுதியில் ஏற்படலாமென அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆட்கொணர்வு மனு மீது இன்று விசாரணை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 1996/97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதாகிக் காணாமற்போன நால்வரின் சார்பில் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.

யாழ்.மேல்நீதிமன்றத்தில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

## ஆளும் கட்சிக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் பல்வேறு கருத்து மோதல்கள் ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதாக அறிவித்துள்ளமைக்கு புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தப் போவதே காரணம் என்ற தகவல் தொடர்பாக ஜே.வி.பி.யின் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் அரசாங்கத்திடம் தமது விளக்கத்தைக் கோரியுள்ளனர்.

அந்தவேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் அரசாங்கத்தில் இணைந்துள்ள ஆறுமுகன் தொண்டமான் வடிகால் அமைப்புத் தொடர்பில் இந்திய நிறுவனம் ஒன்றுடன் கொண்டுள்ள உறவுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆளும்தரப்பினர் கருத்துவெளியிட்டனர்.

## தேர்தலுக்கு அடையாள அட்டை ஜனநாயகத்தை வலுப்படுத்தும்!

### ஜே.வி.பி கூறுகிறது

(கொழும்பு)

தேர்தலின்போது அடையாள அட்டைகளை பயன்படுத்துவது தொடர்பாக சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஜனநாயக முறைக்கு வலுச்சேர்க்கப்படும் என ஜே.வி.பி கூறியுள்ளது.

கடந்த காலங்களில் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தேர்தல் மோசடிகளைத் தடுக்க முன்வரவில்லை. இதன் காரணமாக ஜனநாயகத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தடுக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எனவே இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென ஜே.வி.பி கேட்டுள்ளது.


## நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

### மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.


## அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே.கட்சி போராட்டம்!

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறுகோரி ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கமய எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளது.

சுமார் பத்தாயிரம் தொழிற்சங்க உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் - அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்படவுள்ள எதிர்க் கட்சியின முதலாவது போராட்டம் இதுவாகும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

## முகில்கள் மீது 'பிரித்' நீர் ஹெலி மூலம் விசிறியதும் கிழக்கில் பலத்த மழை!

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழைபெய்யவேண்டி நடத்தப்பட்ட பிரித் ஓதும் நிகழ்வின் பின்னர் பிரித்நீரை வானத்தில் கொண்டு சென்று ஹெலிமூலம் விசிறியபோது, மழை பெய்ததாக கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் ஹிங்குராங்கொட விமானத் தளத்திலிருந்து பிரித் நீரை எடுத்துச்சென்ற ஹெலி முகில்களின் மீது விசிறியபோது, திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது.

கடும் மழையினால் அந்த ஹெலி மீண்டும் தளம் திரும்பமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால், விமானி ஹெலியை அம்பாறை விமானப் படைத் தளத்தில் இறக்கினார். கால நிலை சீரடைந்த பின்னரே அந்தக் ஹெலி ஹிங்குராங்கொட திரும்பியது.

## பேசாலை அகதிமுகாமில் ஒருவரைக் காணவில்லை!

(மன்னார்)

மன்னார் - பேசாலை அகதிமுகாமில் தங்கியிருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த 27 வயதான ஜெயபாலசிங்கம் கணேஷ் என்ற குடும்பஸ்தர் ஒருவரே காணாமற் போயிருப்பதாகத் தொவிக்கப்படுகிறது.

காணாமற்போன குடும்பஸ்தர் இலங்கை மின்சாரசபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியவரெனத் தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை இவர் அலுவலகத்துக்குச் சம்பளம் எடுக்கச் சென்றதாகவும் இதன்பின்னரே இவர் காணாமற்போயிருப்பதாகவும் இவரின் மனைவி மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

## மரண அறிவித்தல்



### கந்தவனநாதன் அன்னைபூபதி

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தவனநாதன் அன்னைபூபதி 06.09.2004 நேற்று இயற்கைமரணமெய்தினார்.

அன்னார் கதிரவேலு கந்தவனநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்தையா கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், கதிரவேலு அமிர்தாம்பிகை தம்பதிகளின் மருமகளும், சொர்ணமலர், ஞானபூபதி, பூரணச்சந்திரன், பாலச்சந்திரன், தனபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவகி, திருஞானம், நந்தினி, ரூபி, சத்தியா, சபேசன், மாதினி, அருளேசன், நவரூபி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகசிங்கம், வதனி, நடராசா, ஜெயராசா, சுகுமார், நந்தினி, அனந்தன், கௌசலா, தருமராசா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 37/2 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*37/2 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்..* (927) தகவல்: குடும்பத்தினர்.

### தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல:- 1645 திகதி:- 03.09.2004

வெற்றி இலக்கங்கள்

N 0 2 4 4 7 8

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.